வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வீர மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 44 பக்கங்கள் : 20



08 மீண்டும் பெரும்பான் மையினவாத அணிதிரட்டல் முயற்சிகள்



09 ஜெய்சங்கர் நடத்திய 'தமிழர்; கூட்டம்'



11 வெறுப்பை உமிழப் போகின்றோமா?



18 கோட்டாவின் செயற்பாடுகளே நாட்டின் அழிவுக்குக் காரணம்!

# மார்ச் 9 உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு,ஜன.22

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகலுடன் நிறைவடைந்தது.

ஜனவரி 18 ஆம் திகதி புதன்கிழமை முதல் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன.

இதேவேளை, தேர்தலுக்கான கட்டுப்பணங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று முன் தினம் நண்பகலுடன் நிறைவடைந்தது. (அ)

# மோடியை சந்திக்க இந்தியா செல்லவுள்ளது கூட்டமைப்பு

## தேர்தலுக்கு பின்னர் புதுடில்லி பயணிப்பதற்கு ஏற்பாடு என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்



யாழ்ப்பாணம், ஜனவரி 22

தமிழ் மக்களின் நிரந்தர தீர்வு விடயம் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக ரெலோ, புளொட் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதுடில்லிக்கு பயணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

19



# யாழ்.மாநகர சபைக்கு மீண்டும் முதல்வராகினார் ஆர்னோல்ட்!

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். மாநகர சபையின் முதல்வராக, முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் நேற்று நியமிக்கப்பட்டார். இது தொடர்பான வர்த்தமானி நேற்று வெளியாகியது. உடனடியாகவே அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அதன் முதலாவது சமர்ப்பிப்பின்போது தோற்கடிக்கப்பட்டது. இதனை அடுத்து முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன்

19

# யாழில் முக்கிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்.மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் சிலவற்றின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் 157 வேட்புமனுக்கள்

19

# வேட்புமனு தாக்கலில் சறுக்கிய கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வேலணை பிரதேச சபைக்கு தாக்கல் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையில் கிட்டத்தட்ட பாதி வட்டாரங்கள் நிரா

19

# யாழில் பாணின் விலை 10 ரூபாயால் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்.மாவட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் 450 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது.

இந்த தகவலை யாழ்.மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் க.குணரட்ணம் அறிவித்துள்ளார்.

இதன்படி பாண் ஒன்றின் புதிய விலை 180 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கரைதுறைப்பற்றில் தமிழரசு 'அவுட்'

## புதுக்குடியிருப்பில் ஈ.பி.டி.பி வாய்ப்பை இழந்தது

முல்லைத்தீவு, ஜன. 22

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு தேர்வத்தாட்சி அலுவலகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்

19

# மகிந்த, கோட்டாபய மீது தடை விதிக்க ஜி-7 நாடுகளை ஊக்குவிக்கும் கனடா!

மொன்றியல், ஜன.22

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகள் மீது தாம் விதித்ததை போன்று ஜி-7 நாடுகளும் பொருளாதார தடைகளை விதிக்க ஊக்குவிக்கும் வகையில் கனடா செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரி 10ஆம் திகதி இந்த நான்கு பேர் மீதும் கனடா தடைகளை விதித்தது.

1983 முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான மொத்த மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே இந்த தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜொலி, இந்த தடையை ஜி-7 நாடுகளும் பின்பற்றவேண்டும் என்பதற்காக செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடா எப்போதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயல்படுகிறது என்ற அடிப்படையிலேயே, ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் மற்றவர்கள் மீது கடுமையான தடைகளை விதிக்க முடிவு செய்ததாக

19

## இப்படியும் நடக்கிறது...!

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.பி.சுமந்திரன் தனது தோழன் சாணக்கியனை கூட்டிச் சென்று யாராவது ஒரு தூதுவரைச் சந்திப்பார். அவர் சீனத் தூதுவராகக்கூட இருக்கலாம்.ஆனால் அவர் அப்படிச் சந்திப்பது கூட்டமைப்பில் வேறு யாருக்கும் தெரிந்திருக்காது.அதிகம் ஏன்,அது சம்பந்தனுக்குக்கூட தெரிந்திருக்காது.

ஆனால் அவர் சந்திப்பு முடிந்து வெளியே வந்ததும் ஊடகர்களை அழைத்துச் சந்திப்பை பற்றிச் சொல்லுவார். அதனை அந்த ஊடகர்கள் செய்தியாக்கும்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு அந்த தூதுவரைச் சந்தித்தது என்றுதான் எழுதுவார்கள்.

ஆனால், அதே தூதுவரை ரெலோ கட்சியின் செல்வம் அடைக்கலநாதன் பிறிதொரு நாளில் சந்தித்தால் அந்தச் செய்தியை எழுதும் அதே ஊடகவியலாளரோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த தூதுவரைச் சந்தித்தது என்று எழுதமாட்டார்கள். மாறாக, ரெலோ சந்தித்தது என்றுதான் எழுதுவார்கள்.

அதே சுமந்திரன், கட்சியில் யாருக்கும் சொல்லாமலே பிரிட்டன் செல்வார். சிலவேளை மட்டக்களப்பு சாணக்கியன் எம்.பியுடன் செல்வார். ஆனால் அதனை செய்தி ஆக்குகின்ற ஊடகங்கள் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரிட்டன் சென்றனர் என்றுதான் செய்தி எழுதுவார்கள். ஆனால் செல்வம் அடைக்கலநாதன் பிரிட்டன் சென்று அங்கு யாரையும் சந்தித்து செய்தி வந்தாலும் ரெலோ தலைவர் சந்திப்பு என்றுதான் செய்தி வரும். சித்தார்த்தன் சுவிஸ் சென்றால், புளொட் தலைவர் சென்றார் என்றுதான் செய்தி வரும்.

இவ்வாறாக - கூட்டமைப்பு என்றால் தமிழரசு என்பதும், தமிழரசு என்றால் கூட்டமைப்பு என்பதும்தான் நம்மவர்களின் கற்பிதமாக இதுவரை இருந்து வந்தது. சரி, அதுகூடப் பரவாயில்லை. இப்போது என்னவென்றால், அது என்னவோ கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி வெளியேறிச் சென்றுவிட்ட பின்னரும் கூட, அதனை ஜீரணிக்க பலரால் இன்றுவரை முடியவில்லை.

போதாக்குறைக்கு, 'நாங்கள் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் தேர்தல் முடிந்த பின்னர் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து கூட்டமைப்பாகத்தான் இயங்குவோம்" என்று ஆள் மாறி ஆள் மாறி தமிழரசுக்காரர்கள் தன்னம்பிக்கையற்ற ஏமாற்று அரசியல் செய்து, தமது பங்கிற்கும் மக்களைக் குழப்பிக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியைச் சேர்த்து இயங்குவதா இல்லையா என்பதை இனி கூட்டமைப்பினர்தான் முடிவு செய்யவேண்டும். அதாவது, இன்று ஐந்து கட்சிகளாக வியாபித்து நிற்கும் கூட்டமைப்பின் தலைமை நிறைவேற்றுக்குழுதான் அதனை முடிவுசெய்யவேண்டும் என்கின்றன கூட்டமைப்பின் வட்டாரங்கள்.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, இன்று நாம் சொல்ல வருவது வேறு ஒரு விடயம்: இலங்கைத் தமிழரின் அரசியல் பலமாக இருக்க வேண்டும் என்பதில் நமது அண்டை நாடான இந்தியா அக்கறையோடு இருக்கின்றது என்பதையும், அது ஏன் என்பதையும், அந்த அக்கறையை நாம் எவ்வாறு கையாளவேண்டும் என்பதையும் நேற்று இந்தப் பத்தியில் நாம் விரிவாகப் பார்த்தோம். அதனை, நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை ஒட்டி நடந்த சம்பவம் ஒன்று எமக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை வருவதற்கு முன்னதாக, அவருடனான சந்திப்புக்கு அழைப்பதற்காக, தமிழ்க் கூட்டமைப்பில் எஞ்சியிருந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களுள் மூத்தவரையும் தொடர்புகொண்டு அழைப்பு விடுத்திருக்கின்றனர் இந்திய தூதரக அதிகாரிகள்.அப்போது - அந்தச் சந்திப்பிற்காக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ தலைவர்களோடு தமிழ் மக்களின் மூத்த தலைவர் சம்பந்தன் ஆகிய மூவருக்கும் மட்டுமே ஜெய்சங்கரை சந்திக்க அழைப்பு விடுக்கப்படுவதாக இந்திய அதிகாரிகள் அந்த மூத்த தலைவரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், உடனேயே, அப்படிச் செய்யவேண்டாம் என்று விநயமாகக் கேட்டுக்கொண்ட அந்த மூத்த தலைவர், தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தினதும் தலைவர்களை அழைத்து, அவர்கள் எல்லோரும் தமது கருத்துகளை ஜெய்சங்கருக்குத் தெரிவிக்க வாய்ப்பு வழங்குமாறு வலியுறுத்தியிருக்கின்றார். தமிழர் தரப்பின் அனைத்து மாறுபட்ட கருத்துக்களும் ஜெய்சங்கருக்குப் போய் சேர வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியிருக்கின்றார். கஜேந்திரகுமார், விக்கினேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருடன் சிறீகாந்தாவும் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்படவேண்டும் என்று அந்த மூத்த தலைவர் அவர்களது பெயர்களைக் குறிப்பிட்டே சொல்லியிருக்கிறார். அவரது வேண்டுகோளை ஏற்ற இந்திய அதிகாரிகள், அந்தத் தகவலை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தெரிவித்து, அவரது அனுமதி பெற்ற பின்பே அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு அனுப்பியிருக்கின்றனர். இந்தத் தகவலைத் தந்த தூதரக வட்டாரங்கள், இத்தகைய தலைமைத்துவ அணுகுமுறை கொண்ட அந்த மூத்த தலைவரைப் பாராட்டவும் தவறவில்லை. இருப்பினும், விக்கினேஸ்வரன் தனிப்பட்ட காரணங்களினால் கலந்துகொள்ள முடியாத போதும், அவர் தவிர்ந்த அழைக்கப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றுசேர ஜெய்சங்கரைச் சந்தித்திருந்தனர்.

இதுவரை காலமும் - ஏதாவது ராஜதந்திர மட்ட சந்திப்புக்கள் எனில், தமது பங்காளிக் கட்சிகளையே தவிர்த்துவிட்டு, அல்லது அவர்களுக்கு அறிவிக்காமலே கூட, சம்பந்தனும் சுமந்திரனும் மட்டுமே தனியாகவே அவற்றில் அநேகமாகக் கலந்துகொண்டனர். தம்மோடு கூட இருப்பவர்களையே கூட உதாசீனம் செய்யும் இத்தகைய ஒரு தலைமையே இதுவரை தமிழர்களுக்கு இருந்தது.

ஆனால், இப்போது - தாம் மட்டும் அல்லது தமது கட்சி மட்டும் அல்லாது, தமிழர் தரப்பின் அனைத்து மாறுபட்ட கருத்துகளும் ராஜதந்திர மட்டங்களில் ஒருசேரச் சொல்லப்பட வேண்டும் என்பதோடு, தாம் மட்டுமே உயர் சந்திப்புக்களில் கலந்துகொள்ளாது, தமிழர் தரப்பின் அனைத்து தரப்புகளுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றும் சிந்திக்கின்ற - புதிய ஓர் அரசியல் தலைமைத்துவக் கலாசாரத்தோடு ஒரு தலைவர் நம்மிடையே திகழ்கின்றார் என்பதுவே ஒரு நற்செய்திதான்.

**- ஊர்க்குருவி.**

# வடமாகாணத்தில் உயர்தர பரீட்சைக்கு 17 ஆயிரத்து 555 மாணவர்கள் தோற்றுவர்

யாழ்ப்பாணம், ஜன. 22

வடமாகாணத்தில் 139 பரீட்சை நிலையங்களில் 17 ஆயிரத்து 55 5 பரீட்சாத்திகள் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்-

க.பொ.த உயர்தரப் பரீட்சை நாளை திங்கள் கிழமை ஆரம்பமாக உள்ளது. வடமாகாணத்தில் 15 ஆயிரத்து 156 பாடசாலை பரீட்சாத்திகளும் 2 ஆயிரத்து 399 தனிப்பட்ட பரீசாத்திகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

மாணவர்களின் தியாகங்கள் பெற்றோர், ஆசிரியர், அதிபர்களின் அர்ப்பணிப்புகளால் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் வெற்றி பெறுவீர்கள் என நம்புகிறேன். கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எதிர்வரும் நாட்களில் நிதானமாகவும் தெளிவாகவும் நம்பிக்கையுடனும் பரீட்சையை எதிர்கொள்வதற்கு தயாராகவேண்டும்.

எவ்வளவு கற்றிருக்கிறோம் என்பது முக்கியமல்ல. உரிய நேரத்தில் வினாக்களை விளங்கிக் கொண்டு பதில் எழுதுவதில்தான் தங்கியுள்ளது. ஆகவே பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் நம்பிக்கையுடன் தோற்றி வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

# ஐரோப்பிய ஆட்கடத்தல் கும்பல் சிக்கியது: 14 இலங்கையர்களுக்கு சிறைத் தண்டனை!

பாரிஸ், ஜன. 22

ஐரோப்பா முழுவதும் ஆட்கடத்தல் கும்பலை நடத்திய குற்றத்திற்காக 14 இலங்கை பிரஜைகளுக்கு வடக்கு பிரான்ஸில் உள்ள நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

செரி போன்டைன் கிராமத்தில் உள்ள ஒரு மளிகைக் கடையில் இருந்து நடவடிக்கையை மேற்பார்வையிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபருக்கு, ஒரு வருடம் ஒத்தி வைக்கப்பட்ட நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து உக்ரைனில் இருந்து அகதிகளை ஐரோப்பிய கண்டம் முழுவதும் கடத்தியுள்ளனர். குறிப்பாக, இலங்கை மற்றும் பங்களாதேஷில் இருந்து புலம்பெயர்ந்தவர்களை நகர்த்துவதற்கான விலைகளையும் வழிகளையும் கடை உரிமையாளரான இலங்கையர் நிர்ணயித்ததாக புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மற்றொரு சந்தேக நபருக்கு, நாடு கடத்தல் கோரிக்கைகளை எதிர்த்து போராடி வருபவர், பியூவாஸ் நீதிமன்றத்தால் ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது, மற்றவர்களுக்கு குறைந்த சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

சமீப வருடங்களில் ஐரோப்பாவை நோக்கி குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் கடத்தல் கும்பல்கள் அதிகரித்து வருகின்றனர். பலர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரிட்டனுக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையில் ஐரோப்பாவிற்கு புலம் பெயர்கிறார்கள்.

பிரிட்டன் அரசாங்க புள்ளி விவரங்களின்படி 2022 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து ஆங்கிலக் கால்வாயை கடந்து 45,000 க்கும் அதிகமான புலம் பெயர்ந்தோர் பிரிட்டன் சென்றுள்ளனர். 2021ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 17,000 ஆகும். (அ)

# சட்டத்தரணிகள் போராட்டத்துக்கு எதிராக பொலிஸார் பி அறிக்கை

கொழும்பு, ஜன. 22

நீதித்துறையில் சட்டமா அதிபரின் தலையீடுகளை கண்டித்து ஜனவரி 18ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்த சட்டத்தரணிகள் குழுவுக்கு எதிராக வாழைத்தோட்டப் பொலிஸார் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் பி அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர்.

பி அறிக்கையின்படி, சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, நுவான் போபகே மற்றும் சேனக பெரேரா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவொன்று தேர்தல் சட்டங்கள் மற்றும் தேசிய வீதிச் சட்டத்தின் விதிகளை மீறிப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ததாக பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்வதிலிருந்து கொழும்பு மேலதிக நீதவான் தரங்க மஹவத்தவை தடுக்க சட்டமா அதிபர் முயற்சித்ததை கண்டித்து சட்டத்தரணிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். (அ)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்பு விசுவமடு பகுதியில் மக்கள் போராட்டம்



கிளிநொச்சி, ஜன. 22

விசுவமடுப் பகுதியில் போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசுவமடு வர்த்தகர்களால் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி விசுவமடு பகுதியில் தனியார் வர்த்தக நிலையம் ஒன்றை போதைப் பொருளுக்கு அடிமையான கும்பல் ஒன்று சேதமாக்கியமையை கண்டிக்கும் வகையிலும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெறக்கூடாது என வலியுறுத்தியும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி மற்றும் பொலிஸ் திணைக்களத்தினருக்கும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தோல்வி பயத்தினாலேயே தேர்தலுக்கு அரசு அச்சம்!

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22

"உள்ளூராட்சிசபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும். அதனாலேயே அரச தரப்பினர் இந்தத் தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள். தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க குற்றம் சாட்டினார்.

'உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்குமா?' என்ற கேள்விக்கு அநுரகுமார பதிலளிக்கையில்-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால், ரணில் தேர்தலை ஒத்திப்போடுவதற்கே முயற்சி செய்கின்றார். அரசமைப்பில் அதற்கு இடமில்லை. இதனால் தேர்தல் நடத்தப்படவே வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. 2019



ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்குக் கிடைத்த 69 இலட்சம் வாக்குகளும் ரணிலுக்கு எதிரான வாக்குகள். அப்படியாயின் ரணிலால் எப்படி ஜனாதிபதியாக ருக்க முடியும்?

சோமாலிய நாட்டு கடற்கொள்ளையர்கள் கப்பலைப் பிடித்து வைத்திருப்பது போல் இங்கு திருடர்கள் இலங்கையைப் பிடித்து வைத்துள்ளார்கள். நாட்டை ஆட்சி செய்கின்றார்கள். இவர்களுக்கு மக்கள் ஆணை இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தினால் அவர்களின் நிலை என்னவென்று தெரியவரும். அவர்கள் படுதோல்வியடைவார்கள்.

மக்கள் ஆணை இல்லாத இந்த அரசால் ஆட்சி செய்ய முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த அரசு தோல்வியடைந்தால் மக்கள் பாராளுமன்றத் தேர்தலைக் கேட்பார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டி வரும். அப்போது அதிலும் இந்த அரசு தோல்வியும். அப்போது ஆட்சி கலையும். ஜனாதிபதி இல்லாமல் போவார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும். அதனாலேயே அரச தரப்பினர் இந்தத் தேர்தலுக்கு அஞ்சுகின்றார்கள்.

பணம் இல்லை என்று கூறி தேர்தலை ஒத்திப்போடும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு மக்கள் இணங்கினால் ஜனாதிபதித் தேர்தலையும் பணம் இல்லை என்று கூறி ஒத்திப்போடுவார் ரணில்-என்றார். (அ)



# ஈழமக்கள் ஜனநாயக கட்சி யாழில் வேட்புமனு தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 22

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்தில் வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

நேற்று சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்தில் வேட்புமனு தாக்கல் செய்தது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை அவர்கள் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சி தேர்தல் செயலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் வேட்புமனு



கிளிநொச்சி, ஜன. 22

ஐக்கிய மக்கள் சக்தி கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளுக்கு போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

நேற்று சனிக்கிழமை உமாசந்திரா பிரகாஸ் தலைமையில் கிளிநொச்சி தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். (அ)

# எல்லை தாண்டிய கடற்றொழிலை இந்தியா கட்டுப்படுத்த வேண்டும்!

## வெளிவிவகார அமைச்சரிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் கடல் வளத்துக்கும், இலங்கை கடற்றொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள, இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயல்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன் தினம் வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் அரசியல் பிரமுகர்களை சந்தித்தார்.

இதன்போது, ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சில முக்கிய கோரிக்கைகள் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டதாக கடற்றொழில் அமைச்சின் ஊடகப்பிரிவு



தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறுவதற்கும், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் உட்பட அனைத்து சவால்களையும் தீர்ப்பதற்கு இந்தியாவின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு அவசியம் என்று கூறியுள்ளார். (ஐ)

# நுவரெலியாவில் விபத்தில் சிக்கிய மாணவர்களுக்கு உடன் நிவாரணம்

## ஜனாதிபதி ரணில் பணிப்புரை

கொழும்பு, ஜன. 22

விபத்தில் சிக்கிய மாணவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவர்களுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டால் அவர்களை கொழும்புக்கு அழைத்து வருவதற்கு விமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் ஜனாதிபதி விமானப்படைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் சென்ற பஸ் மற்றும் வான் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நுவரெலியா - நானுஓயா பிரதேசத்தில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வானில் பயணித்த 6 பேரும், விபத்துடன் தொடர்புடைய ஓட்டோவில் பயணித்த ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் பஸ்ஸில் பயணித்த 41 பாடசாலை மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# தேர்தலை அரசு பிற்போடுமானால் மக்கள் வீதிக்கு இறங்கவேண்டும்!

கொழும்பு, ஜன. 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் அரசாங்கத்தின் தான் தோன்றித்தனமான செயல்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட வேண்டும். ஊழல் அரசியல்வாதிகளை ஜனநாயக ரீதியில் புறக்கணிக்க முடியாவிட்டால் போராட்டத்தின் ஊடாக புறக்கணிக்க முடியும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

களனி பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவாக நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் தேர்தலை ஏதாவதொரு வழிமுறையில் பிற்போட அரசாங்கம் பல்வேறு குறுக்கு வழிகளை பிரயோகித்து தேர்தலை பிற்போட அவதானம் செலுத்தியுள்ளது.

தேர்தலை பிற்போடும் இறுதித் துரும்பாக தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத்தல் சட்டத்தை கையில் எடுத்துள்ளது. இந்த சட்டத்தை கொண்டு தேர்தலை பிற்போட முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றபோதும் ஏதாவதொரு வழிமுறையில் தேர்தல் நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டத்துக்கு பின்னர் ஊழல் மோசடி அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில்



செல்ல அச்சமடைந்துள்ளார்கள். தேர்தலுக்கு தயார் என ஊடகங்களில் பெருமிதமாக குறிப்பிடும் பொதுஜன பெரமுன திரைமறைவில் இருந்துக் கொண்டு தேர்தலை பிற்போட ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குகிறது. எவ்வாறு மக்கள் மத்தியில் செல்வது என்ற பிரச்னை பொதுஜன பெரமுனவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பிரதான பிரச்னையாக உள்ளது.

தேர்தலை பிற்போட்டால் அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபடவேண்டும். மக்களின் அபிலாசைக்கு மதிப்பளிக்காமல் தன்னிச்சையாக செயற்படும் இந்த அரசாங்கத்திற்கு மக்கள் அழுத்தமான பாடம் புகட்டவேண்டும். எதையும் செய்யலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

ஊழல் அரசியல்வாதிகளை ஜனநாயக ரீதியில் புறக்கணிக்க மக்களுக்கு இடமளிக்காவிட்டால் போராட்டத்தின் ஊடாக மக்கள் ஊழல் அரசியல்வாதிகளை புறக்கணிக்க நேரிடும். மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் போது அது பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் - என்றார். (அ)

# மின்கட்டண உயர்வை எதிர்த்து நீதிமன்றத்தை நாடவுள்ளேன்!



## ஜனக்க ரத்நாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 22

**மின் கட்டண திருத்தத்துக்கு எதிராக தான் தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.**

எதிர்வரும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய் கிழமையில் நீதிமன்றத்துக்குச் செல்லவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் பகல் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். (அ)

# நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு பல்கலை சமூகத்தின் பங்கு அவசியம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

நூறாவது சுதந்திர தினத்தின்போது (2048) இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு பல்கலைக்கழக சமூகம் உள்ளிட்ட இளைஞர், யுவதிகளின் ஆகக்கூடிய பங்களிப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்திப் பணிகளின்போது பல்கலைக்கழக சமூகத்தின் பங்களிப்பு மிக அவசியம் என்றும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

75 ஆவது சுதந்திர தினத்திற்கு இணையாக தேசிய இளைஞர் தளத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

2048 ஆம் ஆண்டாகும்போது சுபீட்சமானதும் பலம் மிக்கதுமான இலங்கையை கட்டியெழுப்பும் வேலை திட்டத்தில் பங்குதாரர்களாவதற்கு இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் 25 வருட கால அபிவிருத்தி வேலைதிட்டத்துக்கு இளைஞர் சமூகத்தை பொறுப்பு மிக்க பங்காளர்களாக இணைத்துக் கொள்ளுதல் என்பன தேசிய இளைஞர் தளத்தின் நோக்கங்களாகும்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களை இணைத்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள முக்கிய நகரங்களை சுற்றுலா நகரங்களாக மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்றும் இதன் கீழ் நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. அது தொடர்பான முன்மொழிவுகளும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

அதற்கமைய, யாழ்.மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களும் அநுராதபுரம் மாவட்டம் தொடர்பான சுற்றுலா திட்டங்களை களனி மற்றும் ரஜரட்டை பல்கலைக்கழகங்களும் கையளித்தன.

றுகுணு பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக் கழகம் மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து காலி மாவட்டத்தை மையமாகக் கொண்ட சுற்றுலா மேம்பாட்டு வேலைத் திட்டங்களையும் கொழும்பு பல்கலைக்கழகம், சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நுண்கலை பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து கொழும்பு மாவட்டத்திற்கான வேலைத் திட்டங்களையும் சமர்ப்பித்துள்ளன.

பேராதனை, வடமேற்கு மற்றும் ஊவா வெல்லஸ பல்கலைக்கழகங்கள் இணைந்து கண்டி மாவட்டம் தொடர்பான திட்டங்களையும், கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சுற்றலா மேம்பாட்டு திட்டங்களையும் முன்மொழிந்துள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள அனைத்து சுற்றுலாத் திட்டங்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன் அவற்றை நடைமுறைப்படுத்தும்போது தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியங்கள் குறித்தும் இங்கு சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அபிவிருத்திக்குப் பல்கலைக்கழக சமூகம் பங்களிப்பது மிகவும் நல்லதொரு விடயம் என சுட்டிக் காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த தேசிய இளைஞர் தள வேலைத்திட்டத்திற்கு பல்கலைக்கழக கட்டமைப்பு வழங்கும் ஒத்துழைப்புக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். (அ)

# யாழில் ஐ.தே.கவும் வேட்புமனு



யாழ்ப்பாணம், ஜன. 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஐக்கிய தேசிய கட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சி வேட்புமனுவை தாக்கல் செய்தது.

இதன்போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திரக்கட்சியும் வேட்புமனு!

யாழ்ப்பாணம், ஜன. 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை நேற்று தாக்கல் செய்தது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்புமனுக்கள் இதன்போது தாக்கல் செய்யப்பட்டன.

அதேவேளை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தாக்கல் செய்துள்ளது. (அ)







# தமிழரசும் தாக்கல் செய்தது

யாழ்ப்பாணம், ஜன. 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

நேற்று முற்பகல் 10 மணிய ளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங் களுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்புமனுவை தாக்கல் செய்தது. (அ)

# தமிழ் மக்கள் கூட்டணி நேற்று யாழில் வேட்புமனுத் தாக்கல்!



யாழ்ப்பாணம், ஜன. 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி நேற்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

நேற்று முற்பகல் 11 மணிய ளவில் யாழ்.மாவட்ட செயல கத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தமிழ் மக்கள் கூட்டணி வேட்பு மனுவை தாக்கல் செய்தது. (அ)

# தியாகியும் களத்தில்!



யாழ்ப்பாணம், ஜன. 22

தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரன் சுயேச்சைக் குழுவில் களம் இறங்குகிறார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவை தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரன் தலைமையிலான சுயேச்சை குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபையில் மாத்திரம் போட்டியிடுவதற்காக வாமதேவா தியாகேந்திரன் தலைமையிலான சுயேச்சைக் குழுவினர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி யாழில் நேற்று வேட்புமனுத் தாக்கல்



யாழ்ப்பாணம், ஜன. 22

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான (தமிழ்) உமாச்சந்திரா பிரகாஷ் தலைமையிலான குழுவினர் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

ஈழநாடு
Eelanadu
22.01.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 08
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இனி என்ன செய்யப் போகின்றோம்?

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தெளிவான செய்தியொன்றை சொல்லிவிட்டுச், சென்றிருக்கின்றார். இந்தியாவின் எல்லையெது? - அதற்குள் என்ன செய்ய முடியும்?- இலங்கையின் நிலையென்ன, அதற்குள் என்ன செய்ய முடியும்? முப்பது நிமிடங்களுக்கு குறைவான நேரத்தில், தமிழ் தேசியம் பேசிவரும் ஏழு கட்சிகளை, ஒரே மேசையில் வைத்து, தெளிவானதொரு செய்தியை சொல்லிச் சென்றிருக்கின்றார். இதற்கு மேல் இனிப் பேசுவதில் பயனில்லை.

இந்த இடத்திலிருந்து எங்கு செல்வதென்றுதான் தமிழ் தேசிய கட்சிகள் என்போர் சிந்திக்க வேண்டும் - அத்துடன், தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் சிந்திக்கும் சிவில் சமூக அமைப்புக்கள் என்போர் தெளிவானதொரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். இனியும் வெறும் சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஒன்றில் இந்தியா வழங்கும் அறிவுரைகளுக்கு ஏற்ப, 13ஆவது திருத்தச்சட்டத்தை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு பயணிக்க வேண்டும். அது தொடர்பான நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் அதனை தாண்டிச்செல்வதற்கான வழியை மக்கள் முன்னால் வைக்க வேண்டும்.

வெறுமனே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றமென்று கூறிக்கொண்டிருப்பதில் எவ்வித பயனுமில்லை. இவ்வாறான கதைகள், வெறும் கதைகளாகவே இறுதியில் முடிந்துபோகும். ஏனெனில் உலக வரலாற்றில் இவ்வாறான கதைகள் ஏராளம். இவ்வாறான கதைகளுக்கு இறுதியில் என்ன நடந்ததென்னும் கதைகளும் ஏராளம். அதிலும் குறிப்பாக உலகம் அதிகம் பல கூறுகளான அதிகாரமாக மாறிவருகின்ற நிலையில், மனித உரிமை சார்ந்த அழுத்தங்கள் அதிகம் புவிசார் அரசியல் போட்டிகளுக்குள் சிக்குண்டு, சீரழிவதற்கே வாய்ப்புண்டு.

ஐ.நா அடிப்படையில் பலம்பொருந்திய நாடுகளின் பிடிக்குள் அதிகம் சிக்குண்டிருக்கும் ஒரு ஸ்தாபனமாகும். அதனால் ஒரு எல்லைக்கு மேல் நகர முடியாது. ஏற்கனவே ஐ.நா பல விடயங்களில் தோல்வியடைந்திருக்கின்றது. ருவண்டாவில்,எட்டு லட்சம் மக்கள் சொல்லப்பட்டனர். ஒரு இனப்படுகொலை இடம்பெறப்போவதை தெரிந்தே அமெரிக்கா அமைதியாக இருந்தது.ஐ.நா பாதுகாப்புப் பேரவையின் தலையீட்டை கோரிய போது, அப்போதைய கிளின்ரன் - அமெரிக்க நிர்வாகம் அதனை மறுத்தது. நூறு நாட்களில் எட்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

இதேபோன்றுதான் குவாட்டமாலாவின் கதையும். இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். இன்று உக்ரைன் யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பலம்பொருந்திய நாடுகளின் பலப்பரீட்சையில், ஏனைய நாடுகளே வெற்றிபெற முடியாதென்னும் போது, தமிழ் மக்களை போன்ற மிகவும் பலவீனமான நிலையிலிருக்கும் மக்கள் எவ்வாறு வெற்றி பெற முடியும்? ஒரு போதுமே வெற்றிபெற முடியாது. கடந்த எழுபது வருடங்களுக்கும் மேலான அரசியல் பயணத்தில் தமிழ் தலைமைகளால் எதனையுமே அடைய முடியவில்லை. இந்த நிலையில், தற்போது வடக்கு கிழக்கில் வாழ்ந்துவரும் மக்களின் இருப்பையாவது, தமிழ் தலைமைகளால் பாதுகாக்க முடியுமா? அதற்கான பொறிமுறை இருக்கின்றதா?

தற்போதுள்ள தலைமைகள் என்போர் எவரிடமும் எந்தவொரு பொறிமுறையுமில்லை. ஆகக் குறைந்தது வடக்கு-கிழக்கு தழுவி மக்களை அணிதிரட்டக் கூடிய தகுதிநிலையோடு ஒரு கட்சி கூட இல்லை. அவ்வாறாயின் இருக்கின்ற மாகாண சபை முறைமையையும் எதிர்த்துக் கொண்டு, என்ன செய்ய முடியும்? மாகாண சபை விடயத்தில் உங்களோடு இருப்போமென்று கூறுவதற்கு இந்தியா இருக்கின்றது. உங்களின் சமஷ்டிக் கோரிக்கையுடன் நாங்கள் இருப்போம் - இனப்படுகொலைக்கான நீதிக்காக நாங்கள் உங்களுடன் இருப்போமென்று கூறுவதற்கு ஏதாவதொரு நாடு இருக்கின்றதா? அதனை கூறும் வல்லமை எந்தவொரு கட்சியிடமாவது உண்டா? சிவில் சமூகத்திடமுண்டா? புலம்பெயர் சமூகத்திடமுண்டா?

இவ்வாறானதொரு சூழலில் மாகாண சபை விடயத்தில் - அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் நாங்கள் உங்களோடிருப்போமென்று கூறும் நாட்டின் ஆலோசனையும் புறம் தள்ளிவிட்டு, என்ன செய்யப் போகின்றோம்? பதில் என்ன?

# இம்மாத இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்!

## தவறினால் கறுப்புக்கொடி போராட்டம் என்கிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், ஜன. 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும். அதை செய்யத் தவறின், ஜனாதிபதி வரும் இடமெல்லாம் கறுப்புக்கொடி போராட்டத்தை நடத்துவோம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேலன் சுவாமியை கைது செய்தமையை கண்டிக்கிறேன். இவ்வாறெல்லாம் ஜனநாயகப் போராட்டங்களை அடக்க முடியாது. ஜனாதிபதி இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்

அவ்வாறு விடுதலை செய்யத் தவறின் ஜனாதிபதிக்கு எதிராக அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடி போராட்டம் நடத்துவோம்.

அத்துடன் எங்களை எந்தச் சட்டத்தின் கீழும் கைது செய்யலாம். அதற்காக நாங்கள் அஞ்சப் போவதில்லை. எத்தகைய தடைகள் வந்தாலும், நாங்கள் அவற்றை தகர்த்து,எமது மக்களுக்காக எங்களுடைய ஜனநாயக ரீதியான போராட்டத்தை தொடர்ச்சியாக நாங்கள் நடத்துவோம் - என்றார். (அ)

# கடன்களின் சீரமைப்புக்கு சீனா நிச்சயம் உடன்படும்

## இலங்கை நம்பிக்கை

கொழும்பு, ஜன. 22

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனைப் பெறும் திட்டத்துக்கு உதவும் வகையில், தமது கடன்களின் மறுசீரமைப்புக்கு சீனா உடன்படும் என்று நம்புவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இலங்கையின் அதிகாரி ஒருவரை கோடிட்டு ரொய்ட்டர் செய்திச்சேவை இதனை தெரிவித்துள்ளது.

22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கை, கடந்த ஆண்டில் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை காரணமாக, பணவீக்கம் முதல் செங்குத்தான மந்தநிலை வரையிலான சவால்களைச் சந்தித்து வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பிணை எடுப்பதற்கு இலங்கை பந்தயத்தில் ஈடுபட்டுள்ளது,

இந்த பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கு முன்னர், இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கு அதன் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குனர்களான சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் ஆதரவை இலங்கை எதிர்பார்த்திருந்தது.

இந்தநிலையில், இந்தியா, தமது ஆதரவை தற்போது வெளியிட்டுள்ளது.

எனினும் கலந்துரையாடல்களின் இரகசியத்தன்மை காரணமாக, கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் விவரங்களை வழங்குவது கடினமானது என்று திறைசேரியின் பிரதிச் செயலாளர் பிரியந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும், அடுத்த சில நாட்களில் அவர்களின் உறுதிமொழியையும் தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரியந்த ரத்நாயக்க கூறினார். (அ)

# அடுத்த ஆண்டு அறிமுகமாகும் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள்

கொழும்பு, ஜன. 22

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக கடந்த 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை 9 லட்சத்து 11 ஆயிரத்து 693 பேர் கடவுச்சீட்டுக்களை பெற விண்ணப்பித்திருந்ததாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஹர்ச இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு விஸா அனுமதிகளை வழங்க அறவிடப்பட்ட கட்டணங்கள் மூலம் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு கடந்த ஆண்டு 20.1 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.


கடந்த வருடம் 18.05 பில்லியன் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதனை விட மேலதிகமான வருமானத்தை பெற முடிந்தது.

இரட்டை குடியுரிமை வழங்குதல் மற்றும் விமான நிலைய சேவைகள் மூலம் கிடைத்த வருமானத்தில் இந்த வருமானத்தை பெற முடிந்தது.

இதனிடையே எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தற்போது விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டு நவீனமயப்படுத்தப்பட்டு, இலத்திரனியல் வகை கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான தொழிற்நுட்ப குழு நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் அரசாங்கத்திடம் சமர்பிக்கப்பட உள்ளன - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# குத்துச் சண்டை வீரர் பிரான்சிஸ் நீகான்னு ஒரு முன்னுதாரணமாக...

பகிர்வு -65

கணபதி சர்வானந்தா

உலகப் புகழ்பெற்ற சண்டை வீரர் பிரான்சிஸ் நீகான்னு ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். அவர் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தாலும் தன் தாயையும் தாய்நாட்டையும் அதிகம் நேசிப்பவர். இதுவரை பல களங்களைக் கண்டு பல கோடி அமெரிக்க டொலர்களைத் தன் வசம் வைத்திருப்பவர். அவரைக் காணப் பல முக்கிய நபர்கள் காத்துக் கிடப்பர். அவரது சந்திப்புக்காக ஏங்குபவர்களும் உண்டு. பல பிரபலமான உலக வணிக நிறுவனங்கள் தமது தயாரிப்புகளை விளம்பரப்படுத்த அவரோடு ஒப்பந்தம் செய்ய அவரை அணுகுவதுண்டு.

இருந்தும் அவர் தன் தாயைக்காணத் தன் தாய் நாடான ஆபிரிக்காவிலுள்ள கமரூனுக்குச் செல்வது வழக்கம். அவர் அங்கு சென்றால் – தான் அங்கு எப்படிச் சிறு வயதில் ஏழையாக இருக்கும்போது வாழ்ந்தாரோ – அப்படியே வாழ்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதாகச் சொல்லி, அவர் அவரது தாயாருடன் சிறு குடிசையிலே இருந்து உணவு உண்ணும் புகைப்படத்தை முகநூலிலே பதிவிட்டிருந்தார் ஒரு முகநூல் நண்பர்.

எங்கள் ஊரிலுள்ள மாடுகளைக் கட்ட அமைத்திருக்கும் வட்டக் கொட்டில் போன்ற ஒரு குடிசை. அதன் நடுவே ஒரு விறகு கொண்டு சமைக்க உதவும் கல் அடுப்பு. அதனைச் சுற்றி புகை படிந்த கரு நிறத்தில் சில நெளிந்த அலுமினியப் பாத்திரங்கள். அங்கு பிரான்சிஸ் நிகான்னு ஒரு கல்லில் மீது அமர்ந்திருந்து கையிலே உணவுத் தட்டை ஏந்திய வண்ணம் உணவுண்ணுவதாக அப் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் புகைப்படத்தினதும் அவர் தொடர்பான செய்தி பற்றிய உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து குறிப்புகளைப் பலர் பதிவிட்டிருந்தனர். இருந்தும் அதனைப் புகழ்ந்து பாராட்டியவர்கள் அதிகம்.

நிகான்னுவின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர் ஆபிரி. கமரூனில் பிறந்தவர். அவரது பெற்றோர் ஏழ்மையானவர்கள். அவரது சிறுவயதிலே அவர் தாய் தந்தையர் விவாகரத்துப் பெற்றுக் கொண்டனர். பாடசாலைக் கல்வியும் அவ்வளவாக இல்லை. வாழ்வாதாரத்துக்காக அவர் தனது 10 வயதிலே பணத்தைத் தேடும் முயற்சியில் இறங்கிவிட்டார். தெருக்கரைச் சண்டியனின் மகனாக அவர் இருந்தமையால் அவரைத் தமது சண்டைக் கோஷ்டியில் இணைக்கப் பலர் அவரை அணுகினர். அவர் அதனை ஏற்காது தனது தந்தையை வழியைப் பின்பற்றாது அந்தத் திறமையைச் சாதகமான வழியே பயன்படுத்தத் திட்டமிட்டதே அவரது வெற்றி எனலாம். அவர் முறைப்படி பொக்ஸிங் என்னும் சண்டைக் கலையைப் பயில விரும்பினார்.

அவர் தனது 22 வயதிலே ஓரளவு அச் சண்டைக் கலையைப் பயின்றாலும் அதனைத் தொடர அவரது ஏழ்மை அவரை அனுமதிக்கவில்லை. அவர் தனது 26 வயது வரை குடும்ப ஏழ்மையைப் போக்கக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. அதன் பின்பு அவருக்குக் கிடைத்த வாய்ப்புகளை அவர் சரியாகப் பயன்படுத்தினார். சண்டைப் பயிலகங்களைத் தேடிச் சென்றார். அங்கு பணியாற்றிக் கொண்டு சண்டையைப் பயில்வதற்காக அங்கேயே தங்கினார். உலகப் புகழ் பெற்ற மைக் தைசனை அவர் மானசீகக் குருவாக எண்ணிக் கனவு கண்டார். தான் ஒரு நாளில் அவராக வரவேண்டும் எனக் கண்ட கனவு பலித்தது.

எம்.எம்.ஏ எனப்படும் (Mixed martial arts (MMA)) கலப்பு மாஷியல் கலையில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. எம்.எம்.ஏ களங்களைச் சந்திப்பதைக் கனவாகக் கொண்டு இயங்க ஆரம்பித்தார். அத்தகைய கங்களைச் சந்திப்பதென்பதுவும் அங்கு புகழ் பெற்ற வீரர்களோடு சண்டை செய்வதென்பதுவும் இலோசான காரியமல்ல. அதிலே வென்று விருதுகளைப் பெறுவது கடினமான காரியம் என்பதை நன்கறிந்தும் அவர் தனது முயற்சியை விடாது அதனை நோக்கிப் பயணித்ததென்பதுவுமே பல விருதுகளையும் பல கோடி அமெரிக்க டொலர்களையும் அவர் பெறக் காரணமாக இருந்தன.

அதனைப் படித்தபோது பிறரோடு இதனைப் பகிர வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியதுக்கு முக்கிய காரணங்கள் பல. அந்த மனிதரின் உழைப்பு, விடாமுயற்சி, ஒரு இலட்சியத்தை நோக்கிய அவரது பயணம், அத்துடன் இன்றுவரை அவர் கைக்கொள்ளும் எளிமையுமே அக்காரணங்களில் சில. அத்துடன் இவை அனைத்தும் இருந்துவிட்டால் அக் குத்துச் சண்டை வீரரைவிட மேல் சென்று பல சாதனைகளை நிகழ்த்தலாம் என்பதனைச் சொல்ல இதனை ஒரு வாய்ப்பாகவும் எடுத்துக் கொள்ளுகிறேன்.

தன்னிலை மறவாமை, அதாவது பழமையை மனதில் நிலை நிறுத்துதல், அது தொடர்பான அனுபவங்களை இரை மீட்டல், ஒரு குறிக்கோளைக் கொண்டு சதா அதனை நோக்கிப் பயணித்தல் போன்ற பல விடயங்களை வெளிப்படுத்துவதாக அவர் வாழ்க்கைக் குறிப்பு அமைந்திருக்கிறது.

ஒரு எதிர்மறையாக இருந்த அவரது தந்தையின் திறமையை சீர் தூக்கிப் பார்த்துச் சிந்தித்து அதனைத் தனக்குச் சாதகமாக்கினாரே, அங்கு தான் அவர் வெற்றியாளராகத் தன்னை உருவகித்துக் கொண்டார். தந்தை வழிதான் தன் வழி என்று இருந்திருந்தால் தன்னை அணுகிய கோஷ்டிகளில் ஒன்றோடு தன்னை இணைத்துக் கொண்டு தெருச் சண்டியானாகத் தன்னை வளர்த்திருக்கலாம் அல்லது ஏதாவது ஒரு தெருக் கோஷ்டி மோதலில் தன்னை மாய்த்துக் கொண்டிருக்கலாம். அப்படி இல்லாது அவர் அறம் சார்ந்து சிந்தித்ததே அவரது வெற்றிக்குக் காரணமாக இருக்கும் என்பது எனது கருத்து.

தனது முயற்சியில் நம்பிக்கை வைத்து அறவழி செல்ல முயற்சிப்பவன் ஒருவன் உச்சத்தைத் தொடலாம் என்பதற்கு மேற்படி விடயம் சாட்சியாகிறது.அதற்குப் பணபலம் தேவை இல்லை, வேறு வசதி வாய்ப்புகள் தேவை இல்லை, சீரிய சிந்தனையும், விடா முயற்சியும் அவை தொடர்பான தேடுதல்களும் ஒருவனுக்குள் இருக்க வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக அவர் கதை காணப்படுகிறது.

அழுக்கற்ற சிந்தனைகளும் அவற்றை மூலதனமாகக் கொண்ட முயற்சியும், பயணமும் ஒருவனை உயர்த்தலாம். வாழ்வில் உயர பணம் ஒரு தடை என எண்ணுவது தவறு. பொருள் பண்டம் இருந்தால்தான் வாழ்வில் உயரலாம் என்பது சுயமுயற்சியற்ற சோம்பேறிகளின் எண்ணமாகும் என்கிறார் திருவள்ளுவர். வாழ்வைச் சரிவரத் திட்டமிடுவதும் அது தொடர்பாக வருகின்ற வாய்ப்புகளை இனம் கண்டு அவற்றை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவமே உயர்வுக்கு ஏற்ற வழி என்றதையே மேற்குறிப்பிட்ட குத்துச் சண்டை வீரர் பிரான்சிஸ் நீகான்னு நிரூபித்திருக்கிறார்.

# இந்தவார ராசிபலன் 22.01.2023 - 28.01.2023



ஜனவரி 22 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - தை 08

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : பிரதமை




புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. உடல் ஆரோக்கியமும் மன வளமும் சிறப்பாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு செலவு குறையும். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் எச்சரிக்கையுடன் இருப்பார்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுப்பார்கள். அரசியல்வாதிகளுக்குப் புதிய பதவிகள் தேடிவரும். கலைத்துறையினர் குறைசொல்பவர்களைவிட்டு ஒதுக்கிவிடுவார்கள்.





பணவரவு இருக்கும். உறவினர்களால் நன்மை உண்டு. பெற்றோர்களின் ஆதரவு நிரம்பக் கிடைக்கும். உடல் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முயற்சிகளை நன்கு யோசித்து செயல்படுத்தவும். விவசாயிகள் விளைச்சலில் நல்ல நிலையைக் காண்பார்கள். அரசியல்வாதிகளுக்கு கட்சி மேலிடத்தின் அங்கீகாரம் கிடைக்கும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் சுப நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.




நெடுநாளைய எண்ணம் நிறைவேறும். பெரியோரின் தொடர்பும் ஆன்மிக ஈடுபாடும் ஏற்படும். நண்பர்களின் உதவி கிடைக்கும். செல்வாக்கு உயரும். உத்தியோகஸ்தர்கள் அனைத்து வேலைகளையும் செய்துமுடிப்பீர்கள். வியாபாரிகள் சிறிய சிரமத்தைக் காண்பார்கள். விவசாயிகள் கால்நடைகளால் நல்ல லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பிரச்னைகளைச் சமாளிக்கும் ஆற்றல் கிடைக்கும். கலைத்துறையினர் விட்டுக் கொடுத்து நடக்கவும். பெண்கள் கேளிக்கைகளில் பங்கேற்பார்கள்.




எண்ணிய காரியங்களை முடித்துவிடுவீர்கள். சுப காரியங்களில் இருந்த சுணக்கம் குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழிலில் புத்திசாலித்தனத்துடன் நடப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் புதிய யுக்திகளைப் பயன்படுத்துவார்கள். விவசாயிகளுக்கு மகசூல் பெருகும். அரசியல்வாதிகள் அரசு அலுவலர்களின் ஆதரவைப் பெறுவார்கள். கலைத்துறையினர் புதிய படைப்புகளை உருவாக்குவார்கள்.




குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மதிப்பு அதிகரிக்கும். உங்கள் எண்ணங்கள் செயல்வடிவம் பெறும். உத்தியோகஸ்தர்களுக்கு நிம்மதி தரும் இடமாற்றம் உண்டு. வியாபாரிகள் கூட்டாளிகளிடம் ரகசியங்களைப் பகிர வேண்டாம். விவசாயிகள் பழைய குத்தகை பாக்கிகளை வசூலிப்பார்கள். அரசியல்வாதிகள் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண்பார்கள். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.




உயர்பொறுப்பில் இருப்போரிடம் அனுசரித்து நடப்பீர்கள். இல்லத்துக்கு ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். எதிரிகளின் தன்மையை அறிந்து கருத்துகளை கூறவும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைமாற்றம் கிடைக்கும். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்துவார்கள். விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி நன்றாக இருக்கும். அரசியல்வாதிகளுக்கு மேலிடத்தின் ஆதரவு கிடைக்கும். கலைத் துறையினருக்கு ரசிகர்களின் அன்பு மேலோங்கும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு கிடைக்கும்.




முக்கிய திருப்பங்களைக் காண்பீர்கள். ஆசைகளைத் தவிருங்கள். தாமதித்த செயல்களைத் துரிதப்படுத்துவீர்கள். உடல் ஆரோககியத்திலும் அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். வியாபாரிகள் சுமுகமாகப் பழகுவீர்கள். விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்குப் பேச்சில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு சக கலைஞர்களின் உதவி கிடைக்கும்.




எண்ணங்களை உறுதியுடன் செயல்படுத்துவீர்கள். பழைய தாக்கங்களையும் மறக்க முயல்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் நிதானத்துடன் செயல்படுவார்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் சேர்ந்து புதிய முயற்சிகளை செயல்படுத்துவார்கள். விவசாயிகள் கடுமையாக உழைப்பார்கள். அரசியல்வாதிகள் வீண் பேச்சு, சண்டைகளில் ஈடுபடாதீர்கள். பயணங்களைத் தள்ளிப் போடவும்.





இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சமயோஜித புத்தியால் தக்கத் தருணத்தில் சரியான முடிவை எடுப்பீர்கள். ஆன்மிகத்திலும் தரும காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் குறையும். உத்தியோகஸ்தர்கள் புதிய பயிற்சிகளை மேற்கொள்வார்கள். வியாபாரிகள் அனுகூலமான திருப்பங்களைக் காண்பார்கள். விவசாயிகளுக்கு புழு, பூச்சிகளால் பாதிப்பு இராது. அரசியல்வாதிகளுக்கு தடைகள் விலகும்.




பணவரவு நன்றாக இருக்கும். உடன் பிறந்தோரைக் கவருவீர்கள். பழைய கடன்களை அடைப்பீர் கள். உத்தியோகஸ்தர்கள் தங்களது பணிகளை முன்னதாகவே செய்துவிடுவார்கள். விவசாயிகள் பாசன வசதிகளில் கவனம் செலுத்துவார்கள். அரசியல்வாதிகள் எதிர்பாராத உதவிகளைப் பெறுவார்கள். கலைத்துறையினர் புதிய வருவாயை பெறுவார்கள். பெண்களுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.





அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும். தொழிலில் நிலைமைகள் சீரடையும். பழைய கடன்கள் வசூலாகும். திறமையும் தன்னம்பிக் கையும் பளிச்சிடும். உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றத்தைக் காண்பார்கள். வியாபாரிகள் ஆலோசித்து முடிவுகளை எடுக்கவும். விவசாயிகளுக்கு பிறர் உதவிக்கரம் நீட்டுவார்கள். அரசியல்வாதிகள் எதிர்காலத்தை மனதில் வைத்துகொண்டு உழைப்பார்கள். கலைத்துறையினர் பல முயற்சிகளைச் செயல்படுத்துவார்கள். பெண்கள் கணவரை புரிந்துகொண்டு மதித்து நடப்பார்கள்.




வயிற்றுப் பிரச்னைகள் தோன்றி மறையும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். உத்தியோகஸ்தர்கள் கடினமான பணிகளையும் செய்து முடிப்பார்கள். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகளை எடுப்பார்கள். விவசாயிகள் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவார்கள். அரசியல்வாதிகளுக்கு மாற்றுக்கட்சியினரும் உதவி செய்வார்கள். கலைத்துறையினர் புதிய கலைநுட்பங்களைக் கற்றுக்கொள்வார்கள். பெண்களின் அணுகுமுறையை குடும்பத்தினர் பாராட்டுவார்கள். மாணவர்கள் தீயோரின் நட்பை விலக்கி விடுவார்கள்.

# இந்தியாவுடன் நெருக்கத்தை இன்னும் பலமாக்கவேண்டும் தமிழ் தலைமைகள்



சென்னை மடல்
-பகவான் சிங்-

“தை பிறந்தால் வழி பிறக்கும்.” ஜனவரி 15 தொடங்கியதை மாதத்தில் பரவலாகச் சொல்லப்படும் சொல வடை இது. அதாவது, தை பிறந்தால், அனைத்துப் பிரச்னைகளும் தீரும் என்ற நம்பிக்கை. கடந்த ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கல் கொண்டாட்டங்களின்போது, அதிபர் விக்கிரமசிங்க வின் அறிவிப்பால் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம், இலங்கையின் வரலாற்றில் நிறைவேறாத வாக்குறுதி களையே சந்தித்து வந்த சாமானியர்களின் ஆரவார மில்லை, இந்தச் சொலவடையில் நம்பிக்கை கொண்ட அறிவாளிகளின் அரைகுறை உற்சாகம்

மட்டுமே. 13 ஆவது சட்டத் திருத்தம் தமிழர்கள் வாழும் வட பகுதியில் மட்டுமல்லாமல், தெற்கிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தனது அரசாங்கம் நம்புவதாக ரணில் குறிப்பிட்டதையடுத்து, முதல மைச்சர்களின் அந்தக் கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. 13 ஆவது சட்ட திருத்தம் சிங்களத் தெற்குப் பகுதியிலும்கூட நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் ‘நம்ப மட்டுமே’ செய்கிறார் என்று மிகவும் நேர்மையாகவே அறிவித்துள்ளார்.

இதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு, கொழும்பில் நடந்த ஒரு இஸ்லாமிய மாநாட்டில் உரையாற்றிய ரணில், ‘நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை’ உறுதிப் படுத்த, தான், பெரும்பான்மை சிங்களர்கள், மற்றும் தமிழர்கள், இஸ்லாமியர்கள் என்று அனைத்துப் பிரிவினருடனும் பேசி, அவர்களின் பிரச்னைகளை அறிந்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண முயற்சித்து வருவதாகக் கூறியுள்ளார். “நாம்

நமக்குள் சண்டையிட்டு நமது காலத்தின் பெரும் பகுதியை வீணாக்கிவிட்ட நிலையில், நமது நாட்டின் 75 ஆவது ஆண்டு சுதந்தர தினத்தை

எதிர்நோக்கியிருக்கிறோம்.” என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தன் தவறுகளை ஒப்புக்கொள்வதும் சிறந்த எதிர்காலத்துக்கான வாக்குறுதிகளும் இலங்கை அரசியலில் அடிக்கடி ஒலித்தாலும் பெரும்பான்மை சிங்களர்களிடம் வேரூன்றியிருக்கும் இனவெறியும் சிறுபான்மைத் தமிழர்களிடம் இருக்கும் ஒற்றுமையின் மையும் ‘நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை’ நோக்கிய வளர்ச்சிப் பாதையில் முட்டுக்கட்டைகளாகவே இருந்துள்ளன.

இலங்கையின் 21 மில்லியன் மக்களும், இவை யனைத்தையும் மீறி, நல்ல காலத்தை எதிர்பார்ப்பதற்கும் சில காரணங்கள் உள்ளன. ராஜபக்ஷ வெளியேற்றம் இன்னும் முழுமையாக நடைபெறவில்லை. பாராளு மன்றத்தில் அவர் கட்சி உறுப்பினர்களின் ஆதிக்கம் இன்னும் நிலவுவதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றை உறுப்பினரான ரணிலையும் அவர்கள், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அப்போதைய அதிபர் கோட்டாபயவை ஓட ஓட விரட்டிய காலி முகத்திடல் போராட்டங்களும் பொருளாதாரப் படுகுழியிலிருந்து இந்தத் தீவு தேசத்தை மீட்க, சர்வதேச சமூகத்திடமிருந்து தொடர்ந்து அதிகரித்து வந்த ஆதரவு நடவடிக்கைகளும் ராஜபக்ஷ குடும்பத்துக்குப் பாடம் புகட்டியிருக்கவேண்டும். தமிழர்களின் அபிலாஷைகளைக் கண்டு இதுவரை ஆத்திரமடைந்து வந்த தீவிர சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த மத குருமார்களும் கூட சற்று மிருதுவான போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றனர். கடனில் மூழ்கிய இலங்கைப் பொருளாதாரத்தை மீட்கவும் சமூக அரசியல் மறுசீரமைப்பு என்ற சிக்கலான விடயத்தைச் சாதிக்கவும் இத்தனை ஆண்டுகளாகச் சீனாவிடம் இழந்துவிட்ட செல்வாக்கை மீட்கவும் இந்தியா தற்போது தன் ஈடுபாட்டை மேம்படுத்தி வருகிறது.

நம்பகமான அண்டை நாடாக, இந்தியா, தனது உதவிக் கரத்தை நீட்டும் என்று ஜெய்சங்கர் மீண்டும் உறுதியளித்துள்ளார். பிரதமர் மோடியின் ‘அண்டை நாட்டுக்கு முன்னுரிமை’ என்ற வெளியுறவுக் கொள்கை அம்சத்தின் அடிப்படையில், தனது அண்மை விஜயம் அமைந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த விஜயத்தால் மீட்பு நடவடிக்கை துரிதப்படுத்தப் பட்டிருப்பதாக ரனிலும் திருப்தி தெரிவித்தார். இப்போது, சர்வதேச செலாவணி நிதியத்திடமிருந்து 2.5 பில்லியன் டொலரும் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து சுமார் 5 பில்லியன் டொலரும் இலங்கைக்குக் கிடைக்கவிருப்பதாகவும் ரனில் கூறியுள்ளார். “மொத்தம் 7.5 பில்லியன் டொலர்.



லாபமில்லா அரசு நிறுவனங்களின் மறு கட்டமைப்பின் மூலம் ஒரு 3 பில்லியன் டொலர் என மொத்தம் 10 பில்லியன் டொலர் கிடைக்கிறது. இது பொருளா தாரத்தை மீட்டு, நாட்டை இந்தத் துன்பச் சூழலிலிருந்து மீட்கும்” என்று இலங்கை அதிபர் முழங்கியுள்ளார்.

ஜெய்சங்கரின் இலங்கைப் பயணம் இன்னும் சில முக்கியமான நிகழ்வுகளையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் தில்லியில் விமானம் ஏறும் முன்பே, ரணிலிடமிருந்து, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அதிகாரப் பகிர்வைத் துரிதப்படுத்துவது குறித்த உறுதியைப் பெற்றுள்ளார். “அதிபர், ஜெய்சங்கரிடம், தேர்தல் செலவுகளுக்கு நிதி வசதி இல்லை என்று கூறியதாகவும் உங்கள் அமைச்சர், அதற்கு நாங்கள் உதவி செய்வோம் என்ற உறுதிமொழியளித்ததாகவும் தகவல்” என்று ஒரு மூத்த தமிழ்த் தலைவர் கூறினார். “இலங்கையில், ஜன நாயகத்தை நிலைநாட்ட இந்தியா முயற்சித்து வருகிறது”, என்றார் அவர்.

வரவிருக்கும் தேர்தல்கள், நமது அரசியல் தலைவர் களிடையே உள்ள பிரிவினைகளை நம் முன் நிறுத்தும் என்பது தான் தனிப்பட்ட முறையில் எனக்கு வருத்த மளிக்கும் விடயம். இந்தப் பிரிவினைகள், அனேகமாக, தனிப்பட்ட சிந்தனைகள் மற்றும் சுயநய நோக்கங்களால் தான். இதில் சற்றும் பொது நலன் இல்லை. இந்தத் தேர்தலில் மூன்று முக்கிய குழுக்கள் களம் காணுகின்றன - தமிழரசுக் கட்சியின் கூட்டில் யாழ்.மேயர் வேட்பாளர் வித்தியாதரன், தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் விக்கினேஸ்வரன் ஐயாவின் அணி. “தேர்தலில் வெற்றி வாய்ப்பு தமிழரசுக் கட்சிக்கே அதிகமிருக்கிறது. காரணம் அவர்கள் நல்ல வேட்பாளர்களை நிறுத்தியுள் ளார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளரின் ஆளுமையும் உள்ளூர் மக்களிடையே அவருக்கு இருக் கும் செல்வாக்குமே முக்கியம்” என்று கொழும்பில் உள்ள மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் என்னிடம் கூறுகிறார். பெரும்பான்மை உள்ளூராட்சிச் சபை இடங்களை தமிழ் அரசுக் கட்சி வென்றபிறகு, 2018 இல் உள்ளூராட்சித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்ற மகிந்த செய்ததையே செய்ய வாய்ப்புள்ளது. “இரண்டாண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்ட போது, உள்ளூாராட்சித் தேர்தல் வெற்றி, மக்களிடையே தனக்கிருக்கும் பெரும் ஆதரவைக் காட்டுவதாகக் கூறி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றார் மகிந்த. அதே போல, இங்குள்ள தமிழ்க் கட்சிகள் விடயத்திலும் நடக்க வாய்ப்புண்டு” என்று என் பத்திரிகையாளர் நண் பர் கூறினார். மேலும் அவர், “அரசுக் கட்சியிடமிருந்து பிரிவதைத் தவிர்க்கும் ஒரு உத்தியை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டணி மேற்கொண்டிருக்கலாம். ஒரே கூட்டணியாக மாகாண சபைத் தேர்தலைச் சந்தித்து விட்டு, பின்னர், சில மாதங்களுக்குப் பிறகு, அரசுக் கட்சித் தலைமையை எதிர்த்திருக்கலாம்.” என்றும் கூறினார்.

ஜெய்சங்கரின் பயணத்தின்போது, இலங்கையில் இந்திய உதவியுடன் கூடிய வளர்ச்சித் திட்டங்களும் தொடங்கப்பட்டன. இவற்றில் சில தமிழர் பகுதிகளி லும், பல, சிங்களர்களுக்கு உதவும் வகையிலும் இருக் கும். இந்தியா குறித்து எப்போதும், குறிப்பாக, தமிழ்த் தீவிரவாதத்தை இந்திரா காந்தி ஊக்கப்படுத்தியதை யடுத்து, சந்தேகப் பார்வை பார்த்து வந்த சிங்களப் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெற, தாமத மானாலும், இந்தியா எடுக்கும் சிறந்த முயற்சி இது. இந்தத் திட்டங்களுக்கு நடுவில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாக் ஜலசந்திப் பகுதியில் உள்ள மூன்று தீவுகளில் மாற்று ஆற்றல் திட்டங்களில் இந்தியாவின் பங்களிப்புக்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி யுள்ளன. கடந்த ஆண்டு, சீனாவிடமிருந்து இந்தத் திட்டங்கள் இந்தியாவின் கைகளுக்குச் செல்வதாக அறிக்கப்பட்டதையடுத்து சீனா, நெருப்பை உமிழ்ந்து வருகிறது. காரணம், ராமேஸ்வரத்திலிருந்து 40 நிமிடப் பயணத்தில் இருக்கும் இந்தத் தீவுகளில் தனது ஆட் களையும் வேவு பார்க்கும் கருவிகளையும் நிறுத்தி வைத் தால், இந்தியாவின் தென் எல்லையில் ஒரு போர்க் களத்தை உருவாக்கி, அதன் மூலம் வட, வட கிழக்குப் பகுதியில் உள்ள இந்தியத் துருப்புகளைக் குறைக்கலாம் என்பது சீனாவின் திட்டம். இவ்வளவு நேர்மறையான நிகழ்வுகளுக்கும் இடையில், கடந்த கால அனுபவங்கள், அலட்சியப் போக்கு கூடாது என்று கற்பிக்கின்றன. தனது இலங்கைப் பயணத்தின் போது, உற்சாகமாக ட்வீட் செய்த அமைச்சர் ஜெய்சங்கருக்கு, இந்திய உச்ச நீதி மன்ற வழக்கறிஞர் ஆஷிஷ் பாண்டே அளித்த பதில் ருவீட்டில், “சீனாவின் கட்டளைக்கு அடிபணிந்து, பல முறை இந்தியாவின் பாதுகாப்பு குறித்த கவலைகளை

இலங்கை அலட்சியப்படுத்தியுள்ளது. அதுவும் நமது தாராளமான பொருளாதார உதவியுடன். நாம் வெறும் கேரட்டை மட்டுமே ஊட்டுகிறோம் தடியைக் காட்டுவ தில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு வட இந்தியர் அனில் படேல், ‘இலங்கை சீனாவின் நெருங்கிய நண்பன்’ என்று ட்வீட் செய்துள் ளார். இந்தியாவை ஏமாற்றி இலங்கை சீனாவுடன் உறவாடுவது குறித்து இந்தச் சாமானியரும் பெருமளவு அறிந்திருப்பார் போலும். பெரும்பாலான தமிழர்கள் இந்தியா குறித்துக் கொண்டுள்ள எண்ணங்களைத் தீட்டாமல் இந்தச் சித்திரம் நிறைவு பெறாது. யாழ்ப் பாண வீடுகளில் இந்தியத் தேசியத் தலைவர்களின் படங்கள் வெளிப்படையாக மாட்டப்பட்டிருந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று, தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் வெளிப்படையாக இந்தியாவின் மீது வெறுப்பை உமிழ்வதையும் ஆதிக்க சிங்களத் தலைவர்களுடனும் சீனாவுடனும்கூட ரகசிய உறவு கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. இது போன்ற விடயங்களில் ஜெய்சங்கரும் அவரது அமைச்சரவை சகாக்களும் இன்னமும்கூட ஹோம் வொர்க் செய்ய வேண்டியுள்ளது என்பதே இதன் பொருள்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# மீண்டும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டல் முயற்சிகள்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இந்தியாவின் தலைசிறந்த வரலாற்றாசிரியர் றொமிலா தாப்பர் எழுதிய " இந்து - முஸ்லிம் உறவுகள் குறித்து வரலாறு உண்மையில் எமக்கு சொல்வது என்ன?" என்ற தலைப்பிலான அருமையான கட்டுரையொன்றை "த வயர்" வலைத்தளத்தில் வாசிக்கக் கிடைத்தது. நல்ல கட்டுரைகள் என்றால் அவற்றை நான் அனேகமாக "வட்ஸ்அப்" மூலம் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வது வழக்கம். இந்த கட்டுரையையும் அவ்வாறே பலருக்கு அனுப்பினேன். அவர்களில் மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளர் லக்ஸ்மன் குணசேகரவும் ஒருவர்.

அதை வாசித்த உடனடியாகவே எனக்கு அவர் செய்தியொன்றை அனுப்பினார். "இலங்கை வரலாறும் வரலாற்று எழுத்தாண்மையும்" (History and Historiography) என்ற தலைப்பில் இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்கள் பங்குபற்றும் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்தால் என்ன என்ற யோசனையை அதில் குணசேகர முன்வைத்தார். எமது நாட்டின் வரலாறும் தொல்பொருளியல் ஆய்வும் பல்வேறு சக்திகளினால் கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களுக்காக தொடர்ச்சியாக முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. வரலாறு எழுதுதல் இன்றைய சிங்கள கலாசாரக் கட்டமைவில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. இது பற்றி ஒரு புரிதலை முதலில் நாம் ஊடகத்துறையினர் மத்தியில் ஏற்படுத்துவது அவசியம் என்று தனது யோசனைக்கான நியாயத்தையும் அவர் கூறினார்.

"அறகலய" மக்கள் போராட்டத்தையடுத்து கடும்போக்கு சிங்கள தேசியவாத அல்லது சிங்கள மேலாதிக்கவாத சக்திகளின் செயற்பாடுகளில் ஒரு "இடை ஓய்வு" காணப்படுகிறது. அதை வாய்ப்பாக பயன்படுத்தி ஆரோக்கியமான சிந்தனைகளின் வளர்ச்சிக்கு செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியும் என்றும் குணசேகர தெரிவித்தார்.

அவர் அடையாளம் கண்ட அந்த "ஓய்வு" குறித்து சில விடயங்களைக் கூறுவதற்காகவே அவருக்கும் எனக்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்தை இங்கு பகிர்ந்துகொண்டேன்.

இலங்கையில் பெரும்பான்மையினவாத அணிதிரட்டல் என்பது காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த ஒன்றுதான். ஆனால், அண்மைய இரு தசாப்தங்களில் ராஜபக்சாக்களின் ஆட்சியின் கீழ் - உள்நாட்டுப்போர் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்திலும் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலகட்டத்திலும் - முன்னென்றும் இல்லாத அளவுக்கு தீவிரமாக அந்த அணிதிரட்டல் முன்னெடுக்கப்பட்டது. அதற்கு கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகள் உறுதுணையாகச் செயற்பட்டுவந்தன.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மற்றும் அபிலாசைகளைப் பொறுத்தவரை ராஜபக்சாக்களின் நிலைப்பாடுகளுக்கும் அந்த தேசியவாத சக்திகளின் நிலைப்பாடுகளுக்கும் இடையில் பெரிதாக வேறுபாட்டைக் காணமுடியாத அளவுக்கு இரு தரப்பினரதும் செயற்பாடுகள் அமைந்தன. ஆட்சிமுறையின் கெடுதியான சகல போக்குகளையும் உருவகப்படுத்தி நின்ற ராஜபக்சாக்களின் தவறுகளுக்கு கூட நியாயம் கற்பிக்கும் வகையிலான பிரசாரங்களிலும் அந்த தேசியவாத சக்திகள் ஈடுபட்டன.

இலங்கையின் வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமான தவறான ஆட்சிமுறைக்கு பொறுப்பான ராஜபக்சாக்களுக்கு எதிராக கடந்த வருடம் கிளர்ச்சி மூண்டதை அடுத்து சிங்கள கடும்போக்கு தேசியவாத அமைப்புக்கள் மக்களின் சீற்றத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல் பதுங்கத்தொடங்கின. தாங்கள் உறுதியாக ஆதரித்த ஆட்சியாளர்களே நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தார்கள் என்ற உண்மைக்கு முகங்கொடுக்க முடியாமல் போன அந்த அமைப்புக்கள் பல மாதங்களாக அடங்கிப்போய்க் கிடந்தன.

நீண்டகாலத்துக்கு தங்களது குடும்ப ஆதிக்க ஆட்சியை தொடரமுடியும் என்று கனவு கண்டு கொண்டிருந்த ராஜபக்சாக்களுக்கு குறுகிய காலத்திற்குள் நேர்ந்த கதியை சிங்கள தேசியவாத அமைப்புக்களினால் ஜீரணிக்கமுடியவில்லை. சிங்கள மக்கள் ராஜபக்சாக்களுக்கு எதிராக இலங்கை வரலாறு காணாத அளவுக்கு கிளர்ந்தெழுவார்கள் என்று இந்த சக்திகள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால், மீண்டும் தலையெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை அவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

குணசேகர குறிப்பிட்ட கடும்போக்கு சிங்கள தேசியவாதிகளின் செயற்பாடுகளின் "இடைஓய்வு" முடிவுக்கு வரத்தொடங்குகிறது போல தோன்றுகிறது.









> **13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று கூறுபவர்கள் அடிப்படையில் அரசியலமைப்புக்கு எதிராகவே குரல் கொடுக்கிறார்கள். எவ்வாறு அத்தகைய சட்டவிரோத பிரசாரங்களை அவர்களால் சுதந்திரமாக முன்னெடுக்கமுடிகிறது?**

இதை கடந்த சில நாட்களின் நிகழ்வுப் போக்குகளின் மூலம் உணரக்கூடியதாக இருக்கிறது. தங்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரு சிறிய வாய்ப்பையும் கூட தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்வதில் அவை குறியாக இருக்கின்றன. கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழாவில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை இரு வருடங்களில் அரசாங்கம் கட்டங்கட்டமாக முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று செய்த அறிவிப்பை இந்த சக்திகள் சிக்கெனப் பிடித்துக்கொண்டன.

இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாணசபைகள் முறையை அறிமுகப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் கடந்த 36 வருடங்களாக அரசியலமைப்பில் இருக்கிறது. இந்தியாவின் இடையறாத வலியுறுத்தல்களுக்கு மத்தியிலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதை முன்னைய ஜனாதிபதிகள் உறுதிசெய்துகொண்டனர். விக்கிரமசிங்கவினால் அதைச் சாதித்துக்காட்ட முடியுமா என்று தமிழ் மக்கள் சந்தேகிப்பது ஒரு புறமிருக்க, சிங்கள தேசியவாத சக்திகள் நாட்டை பிளவுபடுத்த அவர் முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டத் தொடங்கியிருக்கின்றன.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் குறுகிய காலத்துக்குள் நாடு பிளவடைந்துவிடும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச கூறியிருக்கிறார்

ஜனாதிபதிக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் எழுதியிருக்கும் கடிதத்தில் அவர், "அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டே அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம் பிரிவினைவாதக் கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வு கிடைக்காது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் கடற்படை தளபதியுமான சரத் வீரசேகர காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்டுவருவதற்கு தமிழ் கட்சிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளிக்க தனது ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்துவதற்கு விக்கிரமசிங்கவுக்கு உரிமையில்லை. அத்தகைய உறுதிமொழியை வழங்குவதற்கு அவருக்கு ஆணை கிடையாது. எமக்கிருக்கும் எந்தப் பிரச்சினைக்கும் 13 வது திருத்தம் தீர்வாகாது என்றும் கூறினார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா, "அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகள் தோன்றும். அத்தகைய பாவச்செயலுக்கு பங்காளிகளாவதை தமிழ் அரசியல் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். நாட்டு மக்கள் பட்டினி கிடக்கும் நிலையில் ஜனாதிபதி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப்பார்க்கிறார். வெறுமனே அரசியல் நோக்கத்துக்காகவே 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அவர் முயற்சிக்கிறார். தெற்கு அரசியல்வாதிகள் அதற்கு ஆதரவு என்று வடக்கு மக்களிடம் அவர் பொய் கூறியிருக்கிறார்" என்று சபையில் பேசினார்.

அதேவேளை, தேசிய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரான கலாநிதி குணதாச அமரசேகர 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகளினதும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புக்களினதும் நோக்கங்கள் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்று கொழும்பில் கடந்தவாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறியிருக்கிறார்.

அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவ்வாறு செய்ய வேண்டுமானால் மக்களின் ஆணை வேண்டும். இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே அவர் திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஆர்வம் காட்டுகிறார். இந்தியா இலங்கை மீது முழுமையான அதிகாரத்தை பிரயோகித்து திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் பார்க்கிறது. அமெரிக்காவுக்கும் இதில் பங்கு இருக்கிறது என்றும் அமரசேகர குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் "யுத்துகம" இயக்கத்தின் தலைவருமான கெவிந்து குமாரதுங்க கோட்டாபயவின் ஐந்து வருட பதவிக் காலத்தின் எஞ்சிய பகுதியைப் பூர்த்திசெய்வதே தனது பொறுப்பு என்பதை விக்கிரமசிங்க மறந்துவிடக்கூடாது என்றும் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அவர் மக்களிடம் புதிய ஆணையைப் பெறவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

அந்த திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக முடிவை எடுக்கமுடியாது. முன்னர் பிரதமராக இருந்தபோது நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு இடைநடுவில் குழம்பிப்போன தனது நிகழ்ச்சி நிரலை தொடருவதாக இருந்தால் அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜெய்சங்கர் நடத்திய ‘தமிழர்; கூட்டம்’

## நான்கு கட்சிக் கூட்டமைப்பை அங்கீகரித்து தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தியுள்ளதா?

பனங்காட்டான்

மார்ச் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க வேண்டிய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல், தமிழர் தரப்புடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த தமிழர் பிரச்சனைத் தீர்வு பேச்சுவார்த்தை ஆகிய இரண்டுமே தொடர்ந்து பல வாரங்களாக அரசியல் அரங்கின் முக்கிய பேசுபொருள்களாக உள்ளன.

எக்காரணம் கொண்டும் தேர்தல் நிறுத்தப்படாது என அரசாங்க தரப்பு அடித்து அடித்து கூறினாலும் தேர்தல் நடைபெறுமா என்பது இன்றும் சந்தேகமாகவே உள்ளது.

தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அவசரமாக அரசாங்கம் நிறைவேற்றியிருப்பதன் ஊடாக தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் எதிரணியினருக்கு மேலோங்கியுள்ளது.

தேர்தல் செலவுக்கு பணமில்லையென்று நிதியமைச்சு கைவிரிப்பதும், தேர்தல் செலவுக்காக பணம் அச்சிடப்படமாட்டாது என்று அமைச்சர்கள் கூறி வருவதும், தேர்தலை இடைநிறுத்த நீதிமன்றுக்கும் நாடாளுமன்றத்துக்கும் சட்டப்படி முடியுமென்று எதிர்வு கூறுவதும், தேர்தல் தேவையற்றது - இதனை நிறுத்துவதே சரியென தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டிருப்பதும், பின்னால் வரும் யானையை அடையாளப்படுத்துகின்றன.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போன்று பல அரசியல் கட்சிகளை கூறுபடுத்தியும், புதுப்புதுக் கூட்டணிகளை உருவாக்கியும் தேர்தல் அறிவிப்பு தனது கைங்கரியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. தேர்தல் பரப்புரையில் தாம் ஈடுபடப்போவதில்லையென்ற ரணிலின் முற்கூட்டிய அறிவிப்பு, தேர்தல் தொடர்பான சந்தேகத்தை பலரிடமும் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்தது.

இந்தத் தேர்தல் முன்னெடுப்பினால் தமிழர் தேசியப் பரப்பில் எதிர்பார்த்ததும் எதிர்பார்க்காததுமான பல திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளால் இருபது வருடங்களுக்கு முன்னர் ‘நாடாளுமன்ற அரசியல்’ பணிக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஒவ்வொரு தேர்தல் வரும்போதும் பிளவுகளைக் கண்டு வந்தது. முதலில் தமிழ் காங்கிரஸ், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். என்பவை கழன்று போனதும், கொழும்பிலிருந்து இறக்குமதியான சுமந்திரனும், விக்னேஸ்வரனும் உள்நுழைந்ததும், பின்னர் இவர்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கினால் விக்னேஸ்வரன் வெளியேறி புதிய கட்சியை உருவாக்கியதும் கடந்த பத்தாண்டுக்குள் இடம்பெற்றவை. சித்தார்த்தனின் புளொட் இக்காலத்தில் கூட்டமைப்பில் இணைக்கப்பட்டது இன்னொரு நிகழ்வு.

தற்போது, உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் தாக்குதல் செய்யும் செயற்பாடு எஞ்சியிருந்த கூட்டமைப்புக்குள் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டமைப்பின் பங்காளிகளான ரெலோவும் புளொட்டும் இதுவரை தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிட்டு வந்ததாலும், நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி எம்.பி.யான சம்பந்தனின் தலைமையில் இயங்கி வந்ததாலும், சுமந்திரனின் செயற்பாடுகளை சம்பந்தன் கண்களை மூடியவாறு ஏற்றுக் கொண்டிருந்ததாலும், என்றோ ஒருநாள் கூட்டமைப்புக்குள் பிளவு வருமென எதிர்பார்க்கப்பட்டது இப்போது நடந்துவிட்டது,

கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக விளங்கிய தமிழரசுக் கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுமென சம்பந்தனும் சுமந்திரனும் எடுத்த முடிவு (பெயரளவில் இது பொதுச்சபை முடிவென அறிவிக்கப்பட்டது) நீறு பூத்த நெருப்பாக புகைந்து கொண்டிருந்த ரெலோவுக்கும் புளொட்டுக்கும் தீர்க்கமான ஒரு முடிவெடுக்க வழிகொடுத்தது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பையும், சிறீகாந்தா - சிவாஜிலிங்கம் ஆகியோரின் தமிழ் மக்கள் கட்சியையும், ஜனநாயக போராளிகள் அமைப்பையும் இணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தங்களுக்கானதாக ரெலோவும் புளொட்டும் அறிவித்தன.

இவ்வேளையில் ஒரு கேள்வி எழுந்தது. தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதா அல்லது ரெலோவும் புளொட்டும் கூட்டமைப்பிலிருந்து விலகி மற்றவர்களையும் இணைத்துக் கொண்டு தாமே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என அறிவித்தார்களா என்பதே இக்கேள்வி.

பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்காது தன்னிச்சையாக தமிழரசுக் கட்சி தேர்தலில் போட்டியிடும் என்று அறிவித்தமையால், தமிழரசுக் கட்சியே கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது என்பதுதான் யதார்த்தம்.



**13வது திருத்தத்தை ஏற்றுக்கொண்டு முழுமையாக அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென ரணிலிடம் வலியுறுத்தியுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தீர்வைப் பற்றி பேசிக்கொண்டேயிருப்பது தீர்வாகாது என்றும், அதிகார பகிர்வை ரணில் அரசிடம் தமிழர் தரப்பு ஒன்றுபட்ட குரலில் வலியுறுத்த வேண்டுமென்றும் அறிவுரை வழங்கியிருப்பது எதனை எடுத்துக்காட்டுகிறது?**

மூன்று கட்சிகள் இணைந்த கூட்டமைப்பிலிருந்து தமிழரசு வெளியேறியதால், மிகுதி இரண்டும் - மூன்றிலிரண்டு என்ற பெரும்பான்மையைப் பெற்றன. அத்துடன் ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எஃபும் இவர்களுடன் இணைந்ததால், இவர்கள் தரப்பு நான்கில் மூன்று என்ற எண்ணிக்கையில் ஏகோபித்த பெரும்பான்மையானது. இவர்களுடன் தமிழ் மக்கள் கட்சி, ஜனநாயக போராளிகள் அமைப்பு என்பனவும் இணைந்து கொண்டதால் அரசியல் ஆலமரமாக இது அடையாளம் காணப்பட்டது.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற தேர்தல் பெயரை இந்த ஐவர் அணி தனக்காக சுவீகரித்துக் கொண்டது நியாயமானதாகவே பொதுவெளியில் உணரப்படுகிறது.

2004ம் ஆண்டில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தனது உதயசூரியன் சின்னத்தையும் எடுத்துக் கொண்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர் அதற்கு என்ன நிகழ்ந் ததோ, அதுவே வீடு சின்னத்தைக் காவிக் கொண்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறியுள்ள தமிழரசுக் கட்சிக்கும் ஏற்படலாமென தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

**2004ஆம் ஆண்டில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தனது உதயசூரியன் சின்னத்தையும் எடுத்துக் கொண்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர் அதற்கு என்ன நிகழ்ந்ததோ, அதுவே வீடு சின்னத்தைக் காவிக்கொண்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறியுள்ள தமிழரசுக் கட்சிக்கும் ஏற்படலாமென தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.**

இவ்வாறான நெருக்கடி வேளையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சில காரியங்களை வெற்றிகரமாக பகிரங்கப்படுத்தியுள்ளார். இதுவரை காலமும் ஜெய்சங்கர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயங்களில் கடந்த வாரத்து பயணமே அர்த்தமுள்ள பயனுள்ள ஒன்றாக அமைந்ததாக அரசியல் வட்டாரங்கள் பார்க்கின்றன.

முக்கியமாக தம்முடனான பேச்சுவார்த்தைக்கு, தமிழ்த் தேசிய கட்சிகள் என்று கூறப்படும் தலைவர்கள் ஒவ்வொருவரையும் - எவரையும் தவறவிடாது அழைத்துள்ளார். வென்றவர் தோற்றவர் என்றில்லாமல், இலங்கை - இந்திய ஒப்பந்த 13வது திருத்தத்தை ஏற்பவர் ஏற்காதவர் என்று பிரிக்காமல், அனைவரையும் அரைமணித்தியால பேச்சுவார்த்தைக்கு அழைத்தது சொல்லாமல் சில விடயங்களைச் செய்ததை சொல்லிச் சென்றது. முக்கியமாக சுரேஷ் பிரேமச்சந்திரன், என். சிறீகாந்தா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட பெயர் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியஸ்தர்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தங்களுடையது என்று இன்றும் உரிமைகோரும் தமிழரசுக் கட்சியினரை முன்னர் போன்று கூட்டமைப்பினர் என்று ஜெய்சங்கர் அழைக்கவில்லை. உண்மையான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தாங்களே என்று கூற ஆரம்பித்திருக்கும் நான்கு கட்சிகளின் தலைவர்களையும் முதன்முறையாக ஜெய்சங்கர் ஒரே மேசைக்கு அழைத்துள்ளார். ஒற்றையாட்சிக்குள் தீர்வு கிடைக்காது என்று 13ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவரும் கஜேந்திரகுமார் தமது கருத்தை நேரடியாகவே ஜெய்சங்கரிடம் தெரிவித்தது அவரது அரசியல் நேர்மையை எடுத்துக் காட்டுகிறது.

13ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபை முறையை அமல்படுத்துமாறு வலியுறுத்திய ஜெய்சங்கர், தீர்வைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது தீர்வாகாது என்றும், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட 13ஆம் திருத்தத்தின் கீழான அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்த தமிழர் தரப்பு ஒன்றுபட்ட குரலில் வலியுறுத்த வேண்டுமென்று இச்சந்திப்பில் எடுத்துக் கூறியது முக்கியமான ஓர் அம்சம்.

13ஆம் திருத்த அதிகாரப் பகிர்வுக்கு இந்தியா ஆதரவு வழங்குமென்றும், இதனையே ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தபோது தாம் வற்புறுத்திக் கூறியதாகவும் ஜெய்சங்கர் தமிழர் தரப்புக்கு எடுத்துக் கூறினார்.

அதற்கும் அப்பால் சென்று, இந்தியப் பிரதமர் மோடியை ரணில் அழைத்திருப்பதையும் சொன்னதோடு, சம்பந்தனுக்கான அழைப்பையும் விடுத்தார். ஆனால் ஏனோ தெரியாது சம்பந்தன் அதனை புறக்கணித்து விட்டாராம். கடந்த வருடத்திலும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டபோது தமது கடவுச்சீட்டு காலாவதியாகிவிட்டது என்று சாக்குப் போக்கு கூறிய சம்பந்தன், இந்தத் தடவை என்ன சொன்னாரோ அல்லது சொல்லப் போகிறாரோ தெரியாது.

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தங்களுக்கானதாக்கியுள்ள நான்கு கட்சியினரும் முக்கியமாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்தியா சென்று முக்கிய தலைவர்களை சந்திக்க தயாராக இருப்பதாக ஊடக செவ்வியொன்றில் தெரிவித்திருப்பது இவர்களின் நிலைப்பாட்டை தெரியப்படுத்துகிறது.

ஜெய்சங்கரின் கடந்த வார இலங்கை விஜயம் சில விடயங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஓரளவுக்கு தெளிவாக்கியுள்ளது:

1. 13வது திருத்தத்தின் கீழ் பூரண அதிகாரமுள்ள மாகாண சபை முறைமையை இலங்கை அரசு அமல்படுத்த வேண்டும்.

2. தமிழர் தரப்பு ஒன்றுபட்ட குரலில் இதனை இலங்கை அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

3. இந்த முயற்சிக்கு இந்தியாவின் முழுமையான ஆதரவு இருக்கும்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக் கடிக்கு வெவ்வேறு வகையாக உதவ முன்வந்துள்ள வேளையில், அதற்கு நிகராக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இலங்கை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென மோடி அரசு நிர்ப்பந்தம் செய்ய முடியும். அதனையே செய்வது போலவும் தெரிகிறது.

கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியதை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தமது மறைசெயல் மூலமாக ஜெய்சங்கர் காட்டிச் சென்றுள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உரிமை கோரியிருக்கும் நான்கு கட்சித் தலைவர்களையும் தனித்தனியாக கூட்டத்துக்கு அழைத்ததோடு, அவர்களுடன் தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியோரையும் அமர்த்தி இந்தியாவின் எதிர்பார்ப்பு, பங்களிப்பு ஆகியவைகளை ஜெய்சங்கர் எடுத்துக் கூறியிருப்பது அதிமுக்கியமானது.

இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்ட மற்றொருவரான தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இதில் பங்குபற்றாதது ஏன் என்று இதுவரை தெரியவில்லை. சிலவேளை தனியாக இந்தியா சென்று பேச்சு நடத்தும் எண்ணம் அவருக்கு இருக்கலாம்.

தமிழரசுக் கட்சி தனித்து இயங்குவதையும், கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதையும் கூட்டத்துக்கான அழைப்பு மற்றும் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் ஊடாக ஜெய்சங்கர் வெளிப்படுத்தினார் என்று கருதலாமா? நிச்சயமாகக் கருத இடமுண்டு.

# உள்ளூராட்சித் தேர்தல்:

# தமிழ்க் கட்சிகள் என்ன சொல்கின்றன?

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற் பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள் ளன. வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்து தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இம் முறை வடக்கு - கிழக்கில் தேர்தலில் களமிறங்கவுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் கூறும் கருத்துக்கள் இங்கே:-

## சகல சபைகளையும் நாம் கைப்பற்றுவோம்

**எம்.ஏ.சுமந்திரன்**



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தமிழரசுக் கட்சி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தாக்கல் செய்துள்ளது.

அதிலும் குறிப்பாக வடக்கில் நாங்கள் முற்று முழுதாக சபைகளைக் கைப்பற்றுவதற்குரியவாறாக வட்டாரங்களில் சிறந்த வேட்பாளர்களை தேர்வு செய்து இருக்கின்றோம். அந்த வேட்பாளர்கள் கட்டாயமாக வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறிப்பாக நாங்கள் ஏற்கனவே போட்டியிட்ட வீட்டுச் சின்னத்தில் நாங்கள் இம்முறையும் போட்டியிட உள்ளோம். அதாவது கூட்டமைப்பாக வீட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.


ஆனால் இந்த தேர்தல் முறையில் எமது கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தனித்தனியாக தேர்தலில் நின்று வெற்றி பெற்றால் அதிக ஆசனத்தை பெற்றுக் கொள்ளமுடியும் என்பது தமிழரசுக் கட்சியின் ஒரு நிலைப்பாடு ஆகும். அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் நமது கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகள் தனித்தனியாகவும் களத்தில் இறங்குகின்றன.

ஆனால் தேர்தலின் பின்னர் நாங்கள் ஒற்றுமையாக ஒரே கூட்டமைப்பாக செயல்படுவோம் என்பதுதான் உண்மையான விடயம்.

கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் பிரிந்து தனித்தனியாக தேர்தலில் போட்டியிட்டால் அதிகளவு ஆசனம் கிடைக்கும். அவ்வாறு அதிக ஆசனங்கள் கிடைப்பதன் மூலம் நாங்கள் கூட்டமைப்பாக உள்ளூராட்சி மன்றங்களில் பயணிப்போம் - என்றார்.

## ஒற்றுமையை நிலைநாட்டும் தேர்தல்

**சுரேஸ் பிரேமச்சந்திரன்**



நீண்ட காலமாக இலங்கையில் உள்ளூராட்சிச் சபை தேர்தல் நடத்தப்படாமல் இருந்து தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனு கோப்பட்டு தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.குறிப்பாக தமிழரசுக் கட்சி தனியாக சென்று வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளது. ஆனால் தற்போது நடைபெற உள்ளூராட்சிச் சபை தேர்தல் வெறுமனே உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கு மட்டுமல் லாது எமது தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை நிலைநாட்டுவதாகவும் அமைய உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி யான ஈ.பி.ஆர்.எல். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஆயுத இயக்கங்களுடன் சம்பந்தப்பட்ட தமிழ் பரப்பில் அரசியலில் ஈடுபட்டு வந்த ஆயுத இயக்கக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு அணியில் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டி யிடுகிறோம்.

அந்த ஒற்றுமையானது உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னரும் தொடரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. நீண்ட காலமாக இவ்வாறான ஒரு ஒற்றுமைக்கு நாங்கள் முயற்சித்திருந்தோம்.கடந்த ஒன்றரை வருட காலமாக எடுத்த கடும் முயற்சியின் பயனாக தற்போது இந்த ஒற்றுமை முயற்சி கைகூடி இருக்கின்றது.இந்த ஒற்றுமை முயற்சியை நாம் தொடர்ந்து பேணுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எனினும் தமிழரசுக் கட்சி தனியாக சென்று இந்த ஒற்றுமையை குழப்பதற்கு முயல்வது அனைவரும் அறிந்ததே. ஆனால் ஆயுத இயக் கங்களைச் சேர்ந்த ஐந்து கட்சிகள் நாம் ஒற்றுமையாக இந்த தேர்தலில் ஒன்றிணைந்துள்ளதோடு எதிர்வரும் காலங்களில் நமது ஒற்றுமை முயற்சி தமிழர்களுக்கான தீர்வு விடயம் வரை செயற்படுவதற்கு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது முன்வந்துள்ளது- என்றார்.

## மக்கள் ஆணை தருவார்கள்



**டக்ளஸ் தேவானந்தா**

நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கட்சி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றோம் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமக்கு மக்கள் ஆணை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம். கடந்த காலங்களில் மக்கள் எமக்கு பூரண ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல எதிர்வரும் காலத்திலும் மக்கள் எங்களுக்குரிய ஆணையை வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

நாட்டில் தற்பொழுது பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நாட்டில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் இந்த தேர்தலை சரியாக பயன்படுத்தி சரியானவர்களைத் தெரிவு செய்து தங்களுக்குரிய சேவையை பெற்றுக்கொள்ளமுடியும்-என்றார்.




## மக்களுக்கு நிறைய செய்யவேண்டும்

**வாமதேவா தியாகேந்திரன்**

எனக்கு அதிகம் கதைக்கத் தெரியாது. ஆனால் மக்களுக்கு உதவியை மட்டுமே செய்ய தெரியும் என தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் வாமதேவா தியாகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் பேராசையின் நிமித்தம் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றேன். நான் ஏற்கனவே அரசாங்கத்திற்குக்கூட எனது சொந்த நிதியை வழங்கியுள்ளேன். பல கோடிக்கணக்கான நிதியில் உதவிகள் செய்திருக்கின்றேன். மற்றவர்களைப்போல் அல்லாது நான் கதைக்காமல் செயலில் பல விடயங்களைச் செய்வதற்காகவே இந்த தேர்தலில் போட்டியிடுகின்றேன். யாழ்ப்பாண மாநகர சபையில் மாத்திரம் நாங்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகின்றோம். போட்டியிட்டு வென்றால் எமக்குரிய சம்பளத்தைக்கூட நாங்கள் பெறமாட்டோம் என தெரிவித்து இருக்கின்றோம். அதேபோல இந்த மக்களுக்கு நிறைய செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இப்போதுள்ள அரசியல்வாதிகள் அதைச் செய்கின்றார்களா என சந்தேகம் உள்ளது. எனவே நான் பதவிக்கு வந்தால் அதனை எல்லாம் செய்து காட்டுவதற்கு தயாராக இருக்கின்றேன். குறிப்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் சிறந்த வேட்பாளர்களை களம் இறக்கியுள்ளோம். அந்த வேட்பாளர்கள் கட்டாயம் வெற்றி பெறுவார்கள் என்று நம்பிக்கை எனக்கு உள்ளது-என்றார்.




## இளைஞர்கள் களத்தில்

**வி.மணிவண்ணன்**

இம்முறை உள்ளூராட்சி தேர்தல்களில் எமது கூட்டணியும் போட்டியிடுகின்றது. குறிப்பாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர்நாயகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சகல வட்டாரங்களிலும் இளைஞர்களை வேட்பாளராக நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் எமது கூட்டணி கூடிய அளவில் இளைஞர் யுவதிகளை இந்தத் தேர்தலில் களம் இறங்குகின்றது என யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து வட்டாரங்களிலும் வெல்லக்கூடிய தகுதியான இளைஞர், யுவதிகள் களமிறக்கப்பட்டுள்ளார்கள். அத்தோடு இயன்ற அளவு தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு சபைகளை கைப்பற்றுவதற்கு நாங்கள் முயல்வோம்.

அத்தோடு எமது கூட்டணியில் உள்ள உறுப்பினர்களும் தேர்தலின்போது உழைப்பதற்கு தயாராக இருக்கின்றார்கள். எனவே இந்த தேர்தல் எமக்கு ஒரு தகுந்த வெற்றியை தரும் என எதிர்பார்க்கின்றேன். குறிப்பாக எமது வேட்பாளர் பட்டியலில் அதிகளவு இளைஞர்கள் களம் இறக்கப்பட்டுள்ளார்கள். எனவே இளைஞர்கள் வெற்றி பெறுவதன் மூலம் எமது மக்களுக்கான சேவைகள் அதிக அளவில் கிடைக்கக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன - என்றார்.



ஈழநாடு



# பொறுப்பை உணரப்போகின்றோமா?



மாலினி அஜந்தன்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் அறிவிப்புக்கள் வெளிவந்து, அதன் பின்னர் கட்டுப் பணம் செலுத்தல், வேட்புமனுத் தாக்கல் செய்யும் விடயங்கள் நிறைவடைந்துள்ளன. யார் யார் வேட்பாளர்களாகப் போட்டியிடப் போகின்றார்கள் என்ற விடயங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. தமிழ் மக்களின் பிரதான அரசியல் சக்தியாகத் திகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை தனித்துக் களமிறங்குகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்ககப்பட்ட கூட்டமைப்பில் இருந்து, விடுதலைப் புலிகளின் மௌனத்திற்குப் பின்னர் மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக, அங்கத்துவக் கட்சிகள் பிரிந்து செல்வதும், ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதும், தலைமைத்துப் போட்டிகளும் தலைவிரித்தாடியே வந்தன. ஆனாலும், விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அங்கீகரித்தமைக்கான காரணத்தை நன்கு புரிந்து வைத்திருந்த மக்கள், என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும், தொடர்ச்சியாக ஏகப் பிரதிநிதித்துவத்தை கூட்டமைப்பிற்கே வழங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட போட்டிகளாலும், தேர்தல் வெற்றி தொடர்பான சிந்தனைகளாலும், இத்தனை பாரம்பரியங்களைக் கொண்ட கூட்டமைப்பிலிருந்து, வெளியே தனித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கும் யோசனையை தமிழரசுக் கட்சி எடுத்தது. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் வெல்லப்படும் வரை, கட்சிகளுக்கிடையேயான பிரிவினைகளைக் கட்டுப்படுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஸ்ட அங்கத்துவத்தைக் கொண்டிருந்த, ரெலோ இயக்கமானது புளொட் அமைப்போடு இணைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் செயற்பாட்டில் களமிறங்கியது. இதற்கு முதற்படியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்ட கட்சிகளையும், ஏனையவர்களையும் கூட்டமைப்பிற்கு ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் கடந்த வாரம் மிகத் தீவிரமாக இடம்பெற்றது.

இந்த தீவிர முயற்சிகளை புரிந்து கொள்ளாத நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் எவ்வாறு தானித்துச் செல்லும் முயற்சிகளை எடுத்துவந்ததோ, அதைப்போன்ற ஒரு விடயத்தை முன்வைத்து, தனித்துச் செல்ல முயன்றிருந்தார். ஏற்கனவே தமிழரசுக் கட்சியிடம் பாடங்களைக் கற்ற அனுபமிருந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றன, விக்னேஸ்வரனின் தனித்த முயற்சிகளுக்கு கடிவாளமிட்டு யதார்த்தத்தை புரிய வைத்தபோதும், ஜனநாயகப் போராளிகள் கட்சியை உள்ளீர்த்த விடயத்தை, சாக்குப்போக்காக கூறி, தனது வழமையான பாணியில், அங்கிருந்து வெளியேறி யிருந்தார் சீ.வி. விக்னேஸ்வரன். எது எவ்வாறிருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் புளொட், ரெலோவின் முயற்சி இறுதி யில் பலமான வெற்றியைக் கொடுத் துள்ளதாக அக்கட்சிகளின் வட்டாரங் கள் கூறியமையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போது குத்துவிளக்குச் சின்னத்தில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகள் உட்பட குறிப்பிடத்தக்க ஏனைய அமைப்புக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் வந்துள்ளன. மற்றொரு பக்கத்தில்




தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா பொது ஜன பெரமுன, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சமத்துவக் கட்சிகள் என்பனவும் தேர்த்தலில் களமிறங்குகின்றன.

மக்கள் மத்தியில் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தில் பல்வேறு குழப்பங்களும் இம்முறை தொற்றாமலில்லை. இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் நாம் சில விடயங்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய கட்டாயமொன்று ஏற்பட்டுள்ளது.

கடந்த முறை உங்களது வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், போனஸ் ஆசனங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் பல்வேறு வாக்குறுதிகளை உங்களுக்கு வழங்கியிருப்பார்கள். அப்படியான பலர் இம்முறை மீண்டும் உங்கள் வட்டாரங்களில் களமிறங்கலாம். அவர்கள் கடந்த முறை அளித்த வாக்குறுதிகளை எந்தளவு தூரம் நிறைவேற்றினார்கள்? அவர்கள் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளின் போது ஒருமித்து நிக்க முன்வந்தனவரா? உங்களது வட்டாரங்களில் நடக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுத் தந்தனரா? என்ன என்ன அபிவிருத்திகளைச் செய்தார்கள்? அவர்களை பிரதிநித்துவம் செய்யும் கட்சிகள் தமிழ் மக்களுக்கு என்ன என்ன நன்மைகளைப் பெற்றுத் தந்தன? அடிப்படை வசதிகளை செய்து தந்தனரா? இவ்வாறான கேள்விகளை உங்களை நீங்களே கேளுங்கள்.

சிந்திப்பதற்கான காலத்தில் சிந்திக்காது, நீங்கள் வாக்குகளை பிழையானவர்கள் பக்கம் வழங்கினால், இனி வரப்போகும் நான்கு வருடங்களும், எந்த விதமான மாற்றங்களுமற்ற கடந்த நான்கு வருடங்கள் போன்றே கடந்து போகும். ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் சிந்தித்து உங்கள் முன்னுள்ள பொறுப்புக்களை உணருங்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தின் ஒரு முக்கிய பகுதியொன்றுக்குக் செல்லக் கிடைத்தபோது, தமது வட்டாரத்தை சேர்ந்த உறுப்பினர், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, தமது வட்டாரம் தொடர்பில் பல முன்மொழிவுகள் தன்னிடம் இருக்கின்றது என்றும், அவற்றை நான்கு வருட காலத்திற்குள் நிறைவேற்றுவேன் என கூறியதாகவும், ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்னர், வட்டாரத்தில் அவர் பிரசன்னமான சந்தர்ப்பங்கள் பத்திற்கும் குறைவானவை என அந்தப் பிரதேசத்து மக்கள் கூறியிருந்தனர்.

**உங்கள் பிரதேசத்தின் தேவைகள் தொடர்பான அறிவு மக்களிடம் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிடின், கட்சிகள் பிரிந்து வெறும் வாக்குகளுக்காக மக்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கும் செயற்பாடுகள் மோசமான விளைவுகளை தரும் என்பது தவிர்க்க முடியாத விடயமாகும்.**

வீதி விளக்குகளையும், வீதியையும் அமைப்பது மட்டும்தான் தமது பொறுப்பு என்ற தோரணையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் செயற்படுவது கவலைக்குரிய விடயம். தனது பிரசேத்தில் நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலோ அல்லது கல்வி, சுகாதார முன்னேற்றங்கள் தொடர்பிலோ, தேர்தல் விஞ்ஞாபனங்களில் எழுத்தில் குறிப்பிட்டதைத் தாண்டி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் செயற்படுவதில்லை என்ற விமர்சனத்தை நிச்சயம் சுட்டிக்காட்ட வேண்டும்.

பருத்தித்துறை நகர சபை பல அரசியல் நெருக்குவாரங்களுக்குள் திக்குமுக்காடியபோது, முக்கிய அதிகாரியொருவர் கூறிய விடயத்தை இந்த இடத்தில் குறிப்பிடுவது சாலப் பொருத்தம் என நினைக்கின்றேன். பருத்தித்துறை நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள சந்தைக்கட்டம் மழை காலங்களில் நீர் சிந்துவதாகவும், இதனை சீர் செய்ய பல முயற்சிகள் கடந்த காலங்களில் எடுக்கப்பட்டபோதும் அவை பலனளிக்காத நிலையில், சந்தைக் கட்டடத்தின் மொட்டை மாடியை, உள்ளக விளையாட்டரங்காக மாற்றும் வகையில், அதற்கு மேலே கூரை அமைத்து பயன்படுத்தினால், மழை காலங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும் என்றும், உள்ளக விளையாட்டரங்கு மூலம் குறிப்பிட்டதொரு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என்றும், இந்த யோசனையை நகர சபை உறுப்பினர்களிடம் கூறி, பொது வேலைத்திட்டங்களுக்கு முக்கியத்துவமளிக்குமாறு கேட்கின்றபோதெல்லாம், அதை உதாசீனம் செய்து, வீதி அமைப்பதற்கும், அமைத்த வீதியை மீள புனரமைப்பதற்குமே உறுப்பினர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் கவலை வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாண நகரின் மத்தியின் பெருமளவு நிதியைக் கொட்டி அபிவிருத்தி செய்யப்பட்ட ஆரிய குளத்திற்குப் பதிலாக, நகரில் சிறந்த முதலீட்டுத் திட்டம் ஒன்றிற்கு அன்றைய முதல்வராக இருந்த வி.மணிவண்ணன் ஊக்கமளித்திருந்தால், ஒரு முதலீடும் அதன் மூலமான இலாபமும் மாநகர சபைக்குக் கிடைத்திருக்கும் என்ற விமர்சனமும் இங்கு கவனிக்கத்தக்கதே.

எம்மவர்கள் அபிவிருத்தி என்ற பெயரில் கட்டடங்களுக்கும், வீதி அமைப்பதற்கும் முக்கியத்துவமளிப்பது ஏன் என ஆராய்ந்தபோது, வீதியும், கட்டடமும் அமைக்கப்படும் பிரதேசத்து மக்களின் வாக்கு வங்கியை தக்க வைப்பதற்கே என்பது கவலை தரக்கூடிய விடயம்தான் வெளிப்பட்டது.

போரில் அழிவுகளைச் சந்தித்து, அரசியல் தீர்வுக்காக ஏங்கும் ஓர் இனம், தன்னை கட்டமைத்துக்கொள்ள கிடைக்கும் அதிகாரங்களை, வீணே பயனற்ற விடயங்களுக்காக பயன்படுத்துவதை தடுக்க மக்களும் முன்வர வேண்டும்.

உங்கள் பிரதேசத்தின் தேவைகள் தொடர்பான அறிவு மக்களிடம் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிடின், கட்சிகள் பிரிந்து வெறும் வாக்குகளுக்காக மக்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கும் செயற்பாடுகள் மோசமான விளைவுகளை தரும் என்பது தவிர்க்க முடியாத விடயமாகும்.






# தனுஷ் 50

வெங்கி அட்லூரி இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள வாத்தி படம் பெப். 17ஆம் திகதி திரைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்து அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் கப்டன் மில்லர் என்ற படத்தில் தற்போது நடித்து வருகிறார். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் நடிக்கிறார்.

இதைத் தொடர்ந்து, தனுஷ் நடிக்கும் 50வது படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இது தொடர்பில் வேறு எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

# கமலின் புதிய கூட்டணி



கமல்ஹாசன் - மணிரத்னம் கூட்டணியில் 1987இல் வெளியான “நாயகன்“ திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த கூட்டணி மீண்டும் இணைகிறது.

இதன்படி, கமல்ஹாசனின் 234ஆவது படத்தை மணிரத்னம் இயக்கவிருக்கிறார். படத்தை உதயநிதியின் ரெட் ஜெயண்ட் மூவிஸ், கமலின் ராஜ்கமல் நிறுவனம், மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்றன. படத்துக்கு ஏ. ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். 2024ஆம் ஆண்டு படம் வெளியாகவிருக்கிறது.

இந்தியளவில் தயாராகும் இந்தப் படத்தில் பிறமொழிகளை சேர்ந்த 7 நாயகர்கள் இணைந்து நடிக்கவுள்ளனர்



# ரூ. 200 கோடி வசூல்

கமல்ஹாசனின் மூத்த மகளான ஸ்ருதி ஹாசன் பாடகர், நடிகர், இசையமைப்பாளர் என பன்முக திறன் கொண்டவர். தமிழில் பல படங்களில் நடித்த அவர் தெலுங்கிலும் பல படங்களில் நடித்து வருகிறார். பாலகிருஷ்ணாவுடன் ‘வீர சிம்ஹ ரெட்டி’, தெலுங்கு சுப்பர் ஸ்டார் சிரஞ்சீவி ‘வால்டர் வீரய்யா’ படங்களில் அவர் கதாநாயகியாக நடித்திருந்தார்.

இந்த இரண்டு படங்களுமே பெரும் வெற்றி பெற்றுள்ளது. சிரஞ்சீவியின் வால்டர் வீரய்யா திரைப்படம் 3 நாளில் உலகம் முழுவதும் 108 கோடி இந்திய ரூபாயை வசூலித்துள்ளது. பாலகிருஷ்ணா நடித்த வீர சிம்ஹ ரெட்டிஉலகம் முழுவதும் 4 நாள்களில் 104 கோடி ரூபாயும் வசூலித்துள்ளது.







**திரைப்படம் - வால்டர் வீரய்யா**
**இயக்கம் - பொபி கோலி**
**நடிப்பு - சிரஞ்சீவி, ரவி தேஜா, ஸ்ருதி ஹாசன், கேத்ரின் தெரேசா, பிரகாஷ் ராஜ்**
**இசை - தேவி சிறீபிரசாத்**

துரோகத்தால் வீழ்த்தப்பட்ட காவலரின் நேர்மையை உலகறியச் செய்ய வீரய்யா எடுக்கும் வீரதீர சாகசங்களின் அவதாரமே ‘வால்டர் வீரய்யா’ படத்தின் ஒரு வரி கதை.

சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் சாலமன் சீஸர் (பாபி சிம்ஹா) ‘றோ’ பிரிவு உளவுத் துறையால் கைது செய்யப்பட்டு தனி விமானத்தில் அழைத்துச் செல்லப்படுகிறார். அப்போது வழியில் விமானம் கோளாறாகி நின்றுவிட, காவல் நிலையம் ஒன்றில் தற்காலிகமாக ஓரிரவு மட்டும் அடைத்து வைக்கப்படுகிறார்.

பின்னர், அங்கிருக்கும் காவலர்களை கொன்றுவிட்டு மலேசியா தப்பிச்செல்லும் சாலமனை பழிதீர்க்க, வால்டர் வீரய்யாவின் (சிரஞ்சீவி) உதவியை நாடுகிறார் காவல் ஆய்வாளர் ஒருவர்.

இறுதியில் மலேசியா செல்லும் வால்டர் வீரய்யா, சாலமன் சீஸரை கண்டறிந்து பழிதீர்த்ததா? இல்லையா? என்பதுடன் சில பின்னணி, பல திருப்பங்களை கலந்து சொல்லியிருக்கும் படம் ‘வால்டர் வீரய்யா’. கொந்தளிக்கும் ஆழ்கடலில் கொட்டும் மழையில் பீடியுடன் பிரமாண்டமான அறிமுகம் கொடுக்கிறார் சிரஞ்சீவி.

அவருக்கு இணையாக இல்லாவிட்டாலும் இறுக்கமான மற்றும் அழுத்தமான கதாபாத்திரத்தாலும், இறுதியில் சில உணர்ச்சிகரமான நடிப்பிலும் ஈர்க்கிறார் ரவி தேஜா. காதலுக்காக பாடல்களுக்காக எழுதப்பட்ட கதாபாத்திரமாக ஸ்ருதி ஹாசன் வந்தாலும், சில ஆறுதல் அதிரடி காட்சிகளில் கவனம் பெறுகிறார் கேத்ரின் தெரசாவுக்கு பெரியளவில் வேலையில்லை.

ஸ்ரைலான வில்லனாக பாபிசிம்ஹா நடிப்பில் முக்கியம் பெறுகிறார். பிரகாஷ் ராஜ் தனக்கு பழக்கப்பட்ட வில்லன் ஏரியாவில் தூசி பறக்க களமாடுகிறார். வலுவாக எழுதப்பட்ட அவரின் கதாபாத்திரம் இறுதியில் நீர்த்துப்போகிறது. சத்யராஜ், நாசர் உள்ளிட்ட நடிகர்கள் கதாபாத்திரத்துக்கு தேவையான நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

அறிமுகப் பாடல், காதல், அனல் பறக்கும் வசனங்கள் அதிரடி சண்டைகள் என மெகா ஸ்ராரிடம் ரசிகர்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் ஒருசேர கலந்து படத்தை தொடங்குகிறார் இயக்குநர் பாபி. ஆங்காங்கே சிரஞ்சீவியின் நகைச்சுவையின் பலனளிக்கிறது. முதல் பாதி முழுவதும் மகிழ்ச்சியாக நகரும் படத்தை தனது உடல்மொழி, நகைச்சுவையால் தாங்குகிறார் சிரஞ்சீவி. ஆனால், அதுவும் ஒருகட்டத்துக்குப் பிறகு அயற்சி கொடுக்க படம் இடைவேளையை நெருங்கும்போது சூடுபிடிக்கிறது.

இரண்டாம் பாதியில் ரவி தேஜாவின் வருகை நிமிர்ந்து அமர வைக்க, பிரகாஷ்ராஜ், சிரஞ்சீவி என மூன்று பெரிய நடிகர்களை மையமிட்டு நகரும் கதை நெருடலில்லாமல் பயணிக்கிறது. சிரஞ்சீவிக்கும் - ரவி தேஜாவுக்குமான இரசாயனவியல் அவர்களுக்குள்ளான சில உணரச்சிமயமான காட்சிகளும் பொருந்துகின்றன.

ஆர்தர் ஏ.வில்சனின் ஒளிப்பதிவில் பிரமாண்டமான காட்சிகள் ஒட்டுமொத்த படத்துக்கும் அழகூட்டுகின்றன. ‘பூனகாலு லோடிங்’, ‘வீரய்யா’ பாடல்கள் தேவிஸ்ரீபிரசாத் இசையில் கவனம் ஈர்க்கின்றன. சண்டை, உணர்ச்சிமயமான, சில நையாண்டி காட்சிகளுக்கும் டி. எஸ். பியின் இசை வலு சேர்க்கிறது. நிரஞ்சனின் படத்தொகுப்பு காட்சிக்கு காட்சி ‘மாஸ்’ கூட்ட உதவுகிறது.

உணர்ச்சிமயமான தருணங்களுக்கும் சம்பந்தப்பட்ட காட்சிகள் நியாயம் சேர்க்காதது பெரும் சிக்கல். இதனாலேயே உணர்வுபூர்வமான காட்சிகள் அதன் அடர்த்தியிலிருந்து விலகி நிற்கின்றன. அதேபோல பிரச்னையை மையமாக கொண்டு படம் நகரும் போது, நடுவில் வரும் காதல் பாட்டு பிரியாணிக்கு நடுவில் வரும் ஏலக்காய் போல தொந்தவரவு. மொக்கையான ‘றோ’ உளவுப் பிரிவு, பலவீனமான உச்சக்கட்டம், தேவையில்லாத பல இடங்களில் தொடர்புபடாத ஆங்காங்கே தலைதூக்கும் லொஜிக் மீறல்கள் சோர்வு.

மொத்தத்தில் நீங்கள் சிரஞ்சீவி, ரவி தேஜா ரசிகர்களாக இருந்தால் ‘வால்டர் வீரய்யா’ உங்களை ரசிக்க வைக்கும். பொதுப் பார்வையாளர்களுக்கு வழக்கமான வெகுஜன திரையுலகை சில ஏமாற்றங்களைக் கொடுக்கலாம்.



# மீண்டும் மோதல்

இந்த ஆண்டு மீண்டும் விஜய் - அஜித் படங்கள் மோதிக் கொள்ள வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அஜித்தின் துணிவும் நடிகர் விஜய் நடிப்பில் உருவான ‘வாரிசு’ திரைப் படமும் ஜன.11 ஆம் திகதி திரை யரங்குகளில் வெளியானது. இதனால், இருவரின் ரசிகர்களும் கொண்டாட் டத்துடன் பொங்கலை வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, அடுத்ததாக அஜித் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். ஏ. கே. 62-ஆன இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது. இதே நேரம் நடிகர் விஜயும் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் தன் அடுத்த படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு மீண்டும் அஜித் - விஜய் படங்கள் மோத வாய்ப்புள்ளது.



# வீராங்கனைகளின் போராட்டம்

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் செயல்பாடுகளைக் கண்டித்து மல்யுத்த வீரர்கள் டில்லியில் உள்ள ஜன்தர் மந்தரில் போராட்டம் நடத்தினர். ஒலிம்பிக் போட்டியின் போது முறையான பயிற்சியாளர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்ட்கள் இல்லை எனவும், தங்களின் தனிப்பட்ட விவகாரங்களில் தலையிடுவதாகவும் வேதனை தெரிவித்தனர். மேலும், இதுகுறித்து குரல் எழுப்பினால், அச்சுறுத்தப்படுவதாக மல்யுத்த வீரர் வீராங்கனைகள்கள் புகார் தெரிவித்துள்ளனர்.



# பிரக்ஞானந்தாவின் அடுத்த மைல்கல்

டாடா ஸ்டீல் பகிரங்க சதுரங்க போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீரரான சீனாவின் டிங் லிரினை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா. மிகவும் கடினமான இந்த ஆட்டத்தில் 73 நகர்த்தல்களில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் 2.5 புள்ளிகள் பெற்று நான்காம் இடத்துக்கு முன்னேறினார் பிரக்ஞானந்தா.

மற்றொரு போட்டியில் உலக சாம்பியன் மோக்னஸ் கால்சனை வீழ்த்தினார் அனிஷ் கிரி. இதனால் நடைபெறவிருக்கும் ஐந்தாம் சுற்றுப் போட்டியில் அனிஷ் கிரியை எதிர்கொள்கிறார்



# காயத்தால் தோற்ற நடால்

அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் அமெரிக்க வீரரான மெக்கன்ஸி மெக்டொனால்ட்டிடம் 6-4,6-4,7-5 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தார் ரபேல் நடால். இது குறித்துப் பேசிய நடால், இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாகத் தான் மனதளவில் சிதைந்துபோனதாகக் கூறினார்.மேலும் இதனால் தன்னால் சரியாக விளையாட இயலவில்லை என வருந்தவும் செய்தார். கடந்த ஆஸ்திரேலிய ஓபனை நடால்தான் வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# சர்ச்சையான ஆட்டமிழப்பு

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளிடையேயான முதல் ஒருநாள் போட்டியை இந்தியா வென்றிருக்கிறது. இந்த போட்டியில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிய போது டரில் மிட்செல் வீசிய 40 வது ஓவரில் ஹார்திக் பாண்ட்யா போல்ட் ஆகியிருந்தார். ஆனால், மீள்பார்வையில் பந்து நேராக ஸ்டம்பில் படாமல் விக்கெட் காப்பாளரின் கையுறையே ஸ்டம்பில் பட்டிருந்தது தெளிவாக தெரிய வந்தது. எனில், ஹார்திக் ஆட்டமிழக்கவில்லை அப்படியிருந்தும் ஹார்த்திக்குக்கு மூன்றாம் நடுவர் ஆட்டமிழப்பு வழங்கினார். இந்த

# கில் சாதனை

இந்தியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் ஒரு நாள் போட்டி நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதில் முதல் பந்து வீசிய நியூசிலாந்து அணிக்கு எதிராக 349 ஓட்டங்களை குவித்தது இந்திய அணி. அட்டகாசமாக விளையாடிய ஷூப்மன் கில் இரட்டை சதம் விளாசினார். இதில் 19 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கும். இதன் மூலம் இரட்டை சதம் அடித்த இளம் வீரர் என்ற சாதனையைப் படைத்தார் கில். மேலும், மூன்று நாட்களுக்கு முன் இலங்கைக்கு எதிராக சதம் அடித்த இவர், வெறும் 19 ஒரு நாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களைக் கடந்து அடுத்த சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் இதுவரை அடிக்கப்பட்ட 10 இரட்டை சதங்களில் 7 சதங்களை அடித்தவர்கள் இந்திய வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.






# பார்வையின் அர்த்தம் என்ன?

உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான்களின் பட்டியலில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியும், போர்த்துக்கல்லின் ரொனால்டோ வும் நிச்சயம் இருப்பார்கள். இந்தச் சூழலில் இருவரும் நேருக்கு நேர் பலப்பரீட்சை செய்யும் வாய்ப்பு நேற்று முன்தினம் அமைந்தது. பி. எஸ். ஜி. மற்றும் சவூதி ஸ்டார் லெவன் அணிக்காக இருவரும் விளையாடிய போது இது சாத்தியமானது.

இந்தப் போட்டியில் மெஸ்ஸி விளையாடிய பி. எஸ். ஜி. அணி 5-4 என்ற கோல் கணக்கில் வென்றது. மெஸ்ஸி ஒரு கோல் பதிவு செய்தார். மறுபக்கம் ரொனால்டோ தன் அணிக்காக 2 கோல்களை பதிவு செய்தார். இவர்கள் இருவரில் யார் சிறந்தவர் என்ற ஒப்பீடுகள் ரசிகர்கள் மத்தியில் எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும். உலகக் கோப்பை வெற்றிக்கு பிறகு இதில் மெஸ்ஸியின் கை கொஞ்சம் ஓங்கி உள்ளது. இந்தச் சூழலில் இப்போது அது வேறு கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தப் போட்டியில் மெஸ்ஸி, ரொனால்டோவை ஒரு தொனியில் பார்த்திருப்பார். அந்த காணொலி இப்போது சமூக வலைதளத்தில் வைரலாகி உள்ளது. ரசிகர்கள் ஒவ்வொருவரும் அந்த காணொலி குறித்து தங்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

“ரொனால்டோவை மெஸ்ஸி பார்ப்பது போல நம்மை நேசத்துடன் பார்க்கும் ஒருவரை நேசிக்க வேண்டும்”

“அடுத்தவருக்கு மரியாதை கொடுக்கும் அந்த பண்புதான் மெஸ்ஸிக்கு அழகு. சக போட்டியாளரையும் அவர் அப்படிதான் பார்ப்பார். என்றவிதமான கருத்துகள் பரவுகின்றன.




# வியுக்தியார் பதில்கள்

**பி. காந்தன், கரவெட்டி.**

**கேள்வி:** *யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருப்பதாகவும், இது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்சினையல்ல, தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்தக் கோருகின்றனர் என்றும், ஓரிரு வருடங்களில் கட்டம்கட்டமாக செயல்படுத்தப்படும் என்றும் கூறியிருக்கிறாரே?*

**வியுக்தியார்:** *ஓம். நானும் செய்தியைப் பார்த்தேன். சில மாதங்களுக்கு முன்னர் அவர்தானே பாராளுமன்றத்தில் பேசியபோது அடுத்த பெப்ரவரி 4ம் திகதி நடைபெறவிருக்கின்ற எழுபத்திஐந்தாவது சுதந்திரதினத்திற்கு முன்னதாக ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிடவேண்டும் என்று கூறியிருந்தார். அவர் சொன்னது இதைத்தான் என்று நினைக்கின்றேன். சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்வுக்கு என்ன செய்யப்போகின்றோம் என்பது குறித்து இப்போது அவர் முடிவெடுத்துவிட்டார் போல் தெரிகின்றது. பதின்மூன்றாவது திருத்தம் ஏற்கனவே அரசியலமைப்பில் இருக்கின்ற ஒன்றுதான். அதனை அமுல்படுத்துவதற்கும் மனுசன் ஓரிரு வருடங்கள் தேவை என்கிறார் அதுதான் கொஞ்சம் நெருடலாக இருக்கின்றது. அவர் ஜனாதிபதியாக இருக்கப்போவது இன்னும் இரண்டு வருடங்கள்தானே?*

---

**எஸ். ஜெகதீஸ்வரன்**
**தேற்றாத்தீவு, மட்டக்களப்பு**

**கேள்வி:** *ஈஸ்டர் தாக்குதல் குறித்து உரிய உளவுத் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதிக்கப்பட்டவர்களுக்கு பத்து கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அவ்வாறு நஷ்டஈடு வழங்குவதற்கு தன்னிடம் பணம்இல்லை என்றும் அதற்காக வீதியில் உண்டியல் குலுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறாரே. ஒரு முன்னாள் ஜனாதிபதியிடம் 10 கோடி ரூபா இல்லை என்பதை நம்பமுடிகின்றதா?*

**வியுக்தியார்:** *ஒருவர் தன்னிடம் இல்லை என்றால் நாம் நம்பித்தானே ஆகவேண்டும். ஆனால் அவர் சகோதரர் ட்டலி சிறிசேன, இலங்கையின் ஒட்டுமொத்த அரசி வியாபாரத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர். அண்ணனின் அரசில் அதிகாரமும் அவர் இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணம் என்பதை அவர் மறுக்கமாட்டார். 10 கோடி ரூபாவை அண்ணனுக்கு பிச்சை போடுவது கூட அவருக்கு பெரிய விசயமல்லவே. இவர் எதற்கு வீதியில் நின்று உண்டியல் குலுக்கவேண்டும் என்பதுதான் தெரியவில்லை.*

---

**கே. ஜெயரூபன், தோப்புக்காடு, காரைநகர்.**

**கேள்வி:** *ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு குறுகிய காலத்துக்குள் பிளவடையும் என்று விமல் வீரவன்ச கூறியிருக்கின்றாரே. எனக்கு ஒன்றும் புரியவில்லை, உங்களுக்காவது ஏதேனும் புரிந்ததா?*

**வியுக்தியார்:** *இதில் புரிவதற்கு என்ன இருக்கின்றது?. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றபோது தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாகவும் அப்படி நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபட்டுவிடும் என்றும் கூறுகின்றார் என்று நினைக்கிறேன். முதலில் 13ஐ நடைமுறைப்படுத்தினால் தமிழர்களின் ஆதரவை அவர் பெறமுடியாது என்பது மனுசனுக்கு தெரியவில்லை. தமிழ் மக்கள்தான் 13ஐ தொட்டும் பார்க்கமாட்டோம் என்கிறார்களே. அதுசரி 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்றால் நாடு ஒன்பதாகத்தானே பிளவுபட வேண்டும்?*

---

**வி. தனுஷன், கோவில்குளம், வவுனியா.**

**கேள்வி:** *இனப் பிரச்னைக்கான தீர்வு பேச்சில் இந்தியா போன்ற சர்வதேச சக்திகளை மத்தியஸ்தம் வகிக்க அழைக்க வேண்டும் என்றும், இதுபோன்று மனச்சாட்சியுள்ள சில நாடுகளை பார்வையாளராகவும் உள்ளீர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தி 11 முக்கிய அம்சங்களை உள்ளடக்கி தமிழ் சிவில் சமூகம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதே பார்த்தீர்களா?*

**வியுக்தியார்:** *நமது சிவில் சமூக பிரதிநிதிகளும் எப்போதும் இப்படித்தான். இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13ஐ முழுமையாக அமுல்படுத்தும்வரை இந்தியா தமிழர்களோடு நிற்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் திரும்பத்திரும்ப கூறிக்கொண்டிருக்கும்போது -*

*இது நமது பிரச்சினைக்கான தீர்வுக்கு ஆரம்பப் புள்ளியும் இல்லை என்று கூறிக்கொண்டிருக்கின்ற நாம் இந்தியாவை மத்தியஸ்தத்திற்கு அழைக்கவேண்டும் என்று கேட்கின்றார்கள் நமது சிவில் சமூகத்தினர்.*

---

**எஸ். நிதர்சன், பொற்பதி வீதி, கொக்குவில்.**

**கேள்வி:** *ஒப்பாரும்மிக்காருமில்லா தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னா பின்னமாக்கி வரலாற்று துரோகத்துக்கு பாத்திரவாளியாகி விட்டீர்கள் என்று இரா. சம்பந்தனுக்கு இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் மத்தியகுழு, அரசி யல்குழு உறுப்பினருமான கே.வி. தவராசா. சுட்டிக்காட்டியுள்ளாரே கவனித்தீர்களா?*

**வியுக்தியார்:** *தவராசா சொல்லும் அந்த தலைவருக்குப் பயந்து சந்திரிகாவின் விசேட பாதுகாப்பில் வாழ்ந்தவர்தான் சம்பந்தன். அவரைப் பொறுத்தவரை அந்த தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில் இவ்வளவுகாலமும் அவர் இருந்ததே பெரிய விசயம்தான்.*

# மீண்டும் பெரும்பான்மையினவாத...

*(08ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் மக்களிடம் புதிய ஆணையைப் பெறவேண்டும். அது தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடனும் அவர் கண்ட இணக்கப்பாட்டின் மீதான சர்வஜன வாக்கெடுப்பாக அமையும். யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி செய்த பொங்கல் பிரகடனம் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டது என்றும் குமாரதுங்க தெரிவித்தார்.*

*இவர்கள் மாத்திரமல்ல, வரும் நாட்களில் மேலும் பல சிங்கள தேசியவாத அமைப்புக்கள் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு எதிர்ப்பை வெளிக்காட்ட பிக்குமாரையும் அணிதிரட்டிக்கொண்டு கிளம்பிவரும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.*

*இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சிகளை முன்னெடுக்க விக்கிரமசிங்கவுக்கு அதிகாரமோ ஆணையோ கிடையாது என்பதே இவர்கள் முன்வைக்கின்ற பிரதான வாதமாகும். கோட்டாபயவின் எஞ்சிய பதவிக்காலத்தில் அதாவது 2024 நவம்பர் வரை நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டி யதே அவருக்குரிய பணி என்பது இவர்களது நிலைப் பாடு.*

*கோட்டாபயவும் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்சவை பிரதமராகக் கொண்ட அரசாங்கமும் மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்கமுடியாமல் பதவியில் இருந்து இறங்கிய பிறகு கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் வழங்கிய ஆணை வலுவிழந்துவிட்டது என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. அதனால், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற பலத்தினால் ஜனாதிபதியாக தெரிவான விக்கிரமசிங்கவின் பதவி நியாயப்பாடு இல்லாதது என்றே எதிரணி கட்சிகள் தொடக்கத்தில் இருந்தே கூறிவருகின்றன.*

*ஆனால், அவரின் தெரிவு அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஒரு ஜனாதிபதி தற்போது அரசியலமைப்பில் இருக்கும் ஏற்பாடுகளை - அதாவது 13 வது திருத்தத்தை - நடைமுறைப்படுத்துவதற்கு மக்களிடம் ஆணையைப் பெறவேண்டும் என்று வாதிடுவது எந்த விதமான தர்க்க நியாயத்துக்கும் பொருந்தாது. இதுகால வரையில் 13 வது திருத்தத்தை முழுமையாக*



*நடைமுறைப்படுத்தாமல் இருந்ததன் மூலம் ஜனாதிபதிகளும் அரசாங்கங்களும் அடிப்படையில் அரசியலமைப்பை மீறிச் செயற்பட்டிருக்கிறார்கள். இதற்கு எதிராக இதுவரையில் எவரும் அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முன்வராதது ஏன் என்று புரியவில்லை.*

*13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது என்று வலியுறுத்துபவர்களும் கூட உண்மையில் அரசியலமைப்புக்கு முரணாகவே குரல்கொடுக்கிறார்கள். அரசாங்கங்கள் அரசியலமைப்பை மீறவேண்டும் என்று கூறுகிறார்கள் என்பதே உண்மை அர்த்தமாகும். இவர்கள் எல்லோரும் சட்டமீறல் ஒன்றை எந்த விதமான தயக்கமும் இன்றி சுதந்திரமாக செய்துகொண்டிருக்கிறார்கள். அது பற்றி நியாயபூர்வமாக சிந்திக்கக்கூடிய பெரும்பான்மையின அறிவுஜீவிகள் கூட எதுவும் பேசுகிறார்கள் இல்லை. சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் பிரச்சினைகள் என்று வரும்போது தென்னிலங்கையில் அரசியலமைப்பை மீறி எவரும் செயற்படலாம் என்றாகிறது.*

*இது சிங்கள தேசியவாத அரசியல் கோட்பாடுகளில் உள்ளியல்பாக இருக்கும் ஒழுக்கநியாயப் பாரம்பரியமற்ற போக்கை வெளிக்காட்டுகிறது. அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த மக்களிடம் ஆணை பெறவேண்டும் என்று கோருவது எந்த வகையில் பொருத்தமானது என்று சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்கு சிங்கள தேசியவாத சக்திகள் மத்தியில் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மற்றும் அபிலாசைகள் மீதான வெறுப்புணர்வு வேரூன்றியிருக்கிறது. இதுவே இலங்கையின் முன்னேற்றத்துக்கு பெருந்தடையாக இருந்து வந்திருக்கிறது.*

*இலங்கை இன்று எதிர்நோக்கியிருக்கும் முக்கிய மான பிரச்சினைகளில் இருந்து மீட்சி பெறவேண்டுமா னால், இத்தகைய போக்குகளில் இருந்து அதன் அரசி யல் சமுதாயம் விடுபடவேண்டியது அவசியமாகும்.*

*ராஜபக்சாக்களின் வீழ்ச்சியை பெரும்பான்மையினவாத அணிதிரட்டலின் தோல்வியாகவும் பார்க்க வேண்டும். அத்தகைய அணிதிரட்டலின் மூலமாக உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பி ராஜபக்சாக்கள் தங்களது ஊழலையும் தவறான ஆட்சிமுறையையும் குடும்ப ஆதிக்க அரசியலையும் முன்னெடுத்தார்களே தவிர நாட்டுக்கு எந்த பயனும் கிட்டவில்லை. மக்கள் பட்டினி கிடக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.*

*அண்மைக்காலமாக ஒதுங்கியிருந்த சிங்கள தேசியவாத சக்திகள் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க விடுத்த அறிவிப்பை வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டு மீண்டும் சமூகங்கள் மத்தியில் குரோதத்தை வளர்க்கும் நச்சுத்தனமான பிரசாரங்களை முன்னெடுக்கக் கிளம்புகின்றன. அதன் மூலம் பெரும்பாலும் பயனடையக் கூடியவர்கள் ராஜபக்சாக்கள் போன்ற அரசியல் சக்திகளே.*

*ஊழல் மோசடிகளையும் ஆதிகார துஷ்பிரயோகத்தையும் தவறான ஆட்சிமுறையையும் மூடிமறைக்க பயன்படுத்தப்பட்ட பெரும்பான்மையினவாத அணிதிரட்டலை மீண்டும் ஒருபோதும் தென்னிலங்கை மக்கள் அனுமதிக்கக்கூடாது. அறகலய போராட்டம் சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் சிந்தனையில் எதாவது ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா இல்லையா என்பதை சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கும் உரிமைகளுக்கும் எதிராக சிங்கள தேசியவாத சக்திகள் மீண்டும் முன்னெடுக்க முனையும் அணிதிரட்டல்களுக்கு அவர்கள் காட்டக்கூடிய பிதிபலிப்புக்களில் இருந்தே புரிந்துகொள்ளமுடியும்.*

ஈழநாடு



கன்பரா யோகன்



# துலக்கம்

மாலை வெயில் திண்ணையில் விழுந்திருந்தது. சின்னப்பா திண்ணையில் ஏற்றி வைத்திருந்த சைக்கிளை படி யால் இறக்கி முற்றத்தில் நிற்பாட்டி விட்டு பெடலுக்கு மேலே ஏ வடிவில் சந்திக்கும் உலோகத் தண்டுகளுக்கிடையில் அமுக்கி வைத்திருந்த அழுக்குத் துணியை எடுத்து துடைக்கத் தொடங்கினான். வாயில் சிகரட் புகைந்து கொண்டிருந்தது.

அது திண்ணையில் ஏற்றி வைக்குமளவுக்கு அப்படி ஒரு புது சைக்கிள் இல்லை. ஆனால் முற்றத்தில் நின்றால் அயலிலுள்ள நாய்கள் வந்து சில்லில் மூத்திரம் பெய்து விட்டுப் போகின்றன. அதனால் றிம்மில் பொருத்தியுள்ள கம்பிகள் கறல் பிடித்துப் போகின்றன.

தகர பேணிக்குள்ளிருந்த கொஞ்சத் தேங்காயெண்ணெய்க்குள் போத்தலிலிருந்த மண்ணெணெயில் கொஞ்சம் கலந்தான். மண்ணெணெயின் நாற்றம் மூக்கிலடித்தது. வெள்ளைத்துணியைப் பேணிக்குள் ஒற்றி மட்காட் வளைவுகளைத் துடைக்கத் தொடங்கியபோது பொக்கற்றுக்குள் இருந்த கைத்தொலைபேசி அழைப்பு நெஞ்சில் கிறு கிறு என்று கீச்சம் காட்டியது.

இடக்கையால் அதை எடுக்க தொலைபேசியில் கோமதி

“சின்னா ஒருக்கா ஆஸ்பத்திரிக்குப் போய் வாடா” அவள் இப்படிக் கெஞ்சுவதற்கு ஒரு ராகம் இழுத்தாள்.

“ஏன் உன்ரை புருஷன் எங்கை?”

“கொழும்புக்கு அவர் வான் கொண்டு போய் ஒரு கிழமையா இன்னும் வரேல்லை. அங்கயிருந்து வேற ஒரு ஹயர் வந்ததால கதிர்காம பக்கம் போக வேண்டி வந்திட்டுதாம்”.

“சரி விடு. ஏன் இப்ப ஆஸ்பத்திரிக்கு?

“குட்டித்தம்பிக்கு தொய்வு வந்து முந்தநாள் நான் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக அங்க மறிச்சிட்டாங்கள். இண்டைக்குத்தான் துண்டு வெட்டி விடுவாங்களாம்.”

சின்னப்பா மௌனமாக இருந்தான், அதை புரிந்து கொண்டவள் மேலே தொடர்ந்தாள்

“அதுக்கிடையிலை சாந்திக்கு காய்ச்சல் வந்திட்டுது. அவளை வீட்டை விட்டிட்டு நான் எப்பிடி ஆஸ்பத்திரிக்குப் போவன்?”

சாந்தி கோமதியின் மூத்த பெண்.

“ப்ளீஸ் சின்னா”

இப்படிக் கெஞ்சும் போது கோமதியின் முகத்தை கற்பனையில் கண்டால் பிறகு சின்னப்பா மறுக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் மகேஷ் வீட்டிலிருக்கும் போது அங்கு வரமாட்டான் என்பதும் கோமதிக்குத் தெரியும்.

“சரி போறன், எந்த வாட்டு?”

கேட்டுக் கொண்டே தொலைபேசியை தோளை உயர்த்தி காதில் இடுக்கிக் கொண்டு அழுக்குத் துணியை பழையபடி பெடலுக்கு மேலே சொருகி விட்டவன் சைக்கிளை திருப்பிக் கொண்டு படலைக்கு போனான்.

கோமதிக்கு அவனிலும் இரண்டு வயது அதிகம். கோமதியின் திருமணத்தின் பின் சின்னப்பா வேலைக்கு மத்திய கிழக்குக்கு வேலைக்குப் போனான். அந்தப் பணத்தில்தான் மகேஷ் வான் வாங்குவதற்கு கொடுத்திருந்தான். பிறகு கொஞ்சக் காலத்திலேயே மத்திய கிழக்கிலிருந்து திரும்பி வந்து உள்ளூரில் மூன்று நாலு தொழில்கள் செய்து பார்த்து விட்டான். எதிலும் நிலைக்கவில்லை. சற்று முற்கோபம் இருப்பதால், எதிலும் ஒரு தகராறு வந்து விடும். இப்போது சாப்பாட்டுக் கடையொன்றில் காஷியராக வேலை.

ஆஸ்பத்திரிக்கு வெளியே வேப்ப மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு வாட்டுக்குப் போய் துண்டு வெட்டிக் கூட்டிக் கொண்டு வந்தவன் பின் கரியரில் குட்டித்தம்பியின் ஆஸ்பத்திரி உடுப்பு பையை சொருகியபடி

“ஏறு” என்றான்.

பெடலுக்கு மேலே இருந்த அச்சில் காலை வைத்து ஏறி பாரில் இரு கால்களையும் ஒருபுறம் தொங்கப் போட்டபடி இருந்தான் குட்டித்தம்பி. அவனுக்கு எட்டு வயதிருக்கும்.

சைக்கிள் வேகம் எடுக்கத் தொடங்கியபின் ”உனக்கு இப்ப எல்லாம் சுகம் தானே?” என்றான் சின்னப்பா.

“ம்” என்று விட்டுப் பேசாதிருந்தான் குட்டித்தம்பி.

“வாயத் திறந்து சொல்லேன்”

கோமதியின் புருஷனும் மகேஷும் ஒரு உம்மாண்டி. இவனும் அவன் சாங்கம்தான்.

“ஓம் இப்ப சுகம்” தயங்கியபடி பதில் வந்தது.

கோமதியின் கணவன் மகேஷுடனான உறவில் விரிசல் வந்தது சின்னப்பாவின் திருமணம் என்னும் அரைகுறை நாடகம் நடந்த பிறகுதான். கோமதிதான் மகேஷின் தங்கைக்கு சின்னப்பாவை கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருந்த வேளை திருமணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தங்கை வேறொருவனை விரும்பியதையறிந்து மகேஷ் திருமணத்தை நிறுத்தினான். இதன் பிறகு அவர்கள் வாழ்வினின்றும் முடிந்த வரை ஒதுங்கினான் சின்னப்பா.

மாலை நேரமாதலால் போக்குவரத்து அதிகமாகி, வாகனங்கள் அவ்வப்போது தெருப் புழுதியை கிளப்பிச் சென்றன.

“மூக்கை பொத்திக்கொள். புழுதிக்கு திருப்பி தொய்வு வந்தாலும் வந்திடும்”

பேசாமல் மூக்கை ஒருகையால் பொத்திக் கொண்டான் குட்டித்தம்பி.

சின்னப்பாவின் சைக்கிள் இன்னும் வேகமெடுத்தது.

மருந்துக்கு கடை வளைவைத் தாண்டி அருகிலிருந்த மதகடிக்கு வந்ததும் சைக்கிள் தானாக பிரேக் பிடிப்பதைப் போல தெரிந்தது.

பிரேக் றிம்மில் முட்டுகிறது என்று நினைத்துக் கொண்டே வலித்து பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

அடுத்த அரை நிமிடத்தில் கட கட என்று முன் சில்லில் ஒரு சத்தமும் வந்தது.

இப்போது சைக்கிள் முற்றாக சடன் பிரேக் பிடித்தது போல நிற்க, குதித்து இறங்கி முன் சில்லை பார்த்தான் சின்னப்பா.

குட்டித்தம்பியின் வலக்கால் முழங்காலுக்கு கீழே சைக்கிள் றிம் கம்பிகளுக்கும், போர்க்கிற்குமிடையில் சிக்கியிருந்தது.

வந்த கோபத்தில் குட்டித்தம்பியின் முதுகில் ஒரு அறை விட்டான்.

“ என்னடா வாயிலை என்ன முட்டையே? கால் சில்லுக்கை சிக்கினால் ஒருக்கா கத்தினாலென்ன, மொக்கா”

சில்லுக்குள்ளே கால் போய் அரை நிமிடமாகியும் ஒரு கத்தலோ, குளறலோ இன்றி வாயைத்திறக்காமல் இருந்திருக்கிறான்.

றிம்மின் கம்பிகள் பல உடைந்திருந்தன.

குட்டித்தம்பியின் கால் தசையின் தோலுரிந்து வெள்ளைத்தோல் தெரிந்தது. பிறகு முத்து முத்தாக இரத்தப் பொட்டுகள் தோன்றி தோல் சிவப்பாக மாறியது.

குட்டித்தம்பியின் காலை மெல்ல வெளியே இழுத்தெடுத்த சின்னப்பா, சைக்கிளை அங்கேயே பக்கத்துக்கு கடையில் விட்டு விட்டு குட்டித் தம்பியை ஆட்டோ ஒன்றில் மீண்டும் அந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனான்.

இரண்டு நாட்கள் கடந்தன. மதியம் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆலடி மகாவித்தியாலயம் நோக்கிப் போனான் சின்னப்பா.

தெருவோரமாக நின்ற வாகை மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு சிகரட் ஒன்றை எடுத்து புகைக்க ஆரம்பித்தான். வாகையின் கீழ் விழுந்திருந்த மஞ்சட் பூக்கள் மரத்தை சுற்றியிருந்த நிலத்தை மூடியிருந்தன.

பிறகு கம்பி வேலிக்கு அப்பாலிருந்த மகாவித்தியாலயப் பள்ளி சிறுவர் விளையாட்டு மைதானத்தைப் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். மதிய இடைவேளை மணியடித்ததும் சிற்றோடைகள் வேகமாய் பாய்ந்து வந்து குட்டைக்குள் விழுவதைப் போல எல்லாக் கட்டிடங்களிலிருந்தும் வரிசையாக வந்த பள்ளிச் சிறுவர்கள் மைதானத்துக்குள் வந்தனர்.

மெல்ல மெல்ல நொண்டியபடி முழங்காலுக்கு கீழே அன்றைக்கு போட்ட வெள்ளை பாண்டேஜ் உடன் குட்டித்தம்பி கடைசியாக வந்தான். மைதானத்துக்கு அருகிலிருந்த சுவர் விளிம்போன்றில் இருந்து மற்றவர்கள் விளையாடுவதை குட்டித்தம்பி பார்த்துக் கொண்டிருந்தான். சின்னப்பாவுக்கு குட்டித்தம்பி மேல் இரக்கம் வந்தது. அன்றைக்கு முதுகில் அடித்தது வேறு நினைவுக்கு வந்தது.

பத்து நாட்கள் கழிந்து மீண்டும் அந்த வாகை மரத்தடியில் நின்றான் சின்னப்பா. வழமைப்படி மணியடித்ததும் பிள்ளைகள் வெளியே ஓடி வந்தனர். இப்போது குட்டித்தம்பி காலில் பிளாஸ்டர்தான் போட்டிருந்தான். மற்றைய சிறுவர்களுடன் விளையாட்டிலும் சேர்ந்து கொண்டான்.

ஒருவேளை கோமதியின் கணவன் வீட்டுக்கு வந்திருப்பான். ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்று பேண்டேஜை மாற்றி பிளாஸ்டர் போட வைத்திருப்பான்.

கீழே நிலத்தில் அன்றைக்கு வாகை பரப்பியிருந்த மஞ்சல் பூக்கள் எதையும் காணவில்லை. அவை முதல் நாளிரவு பெய்த மழையால் அடித்து செல்லப் பட்டிருந்தன.

சின்னப்பாவின் சைக்கிள் முன் சில்லுக்கு போட்டிருந்த புதிய கம்பிகள் வெயிலில் பளபளத்தன. இப்போது அவன் மனதிலும் பாரம் குறைந்து அது துலக்கமாக இருந்தது.

# கமரூனில் மொழிச் சீர்திருத்தம் வேண்டிய கோரிக்கை

# ‘அம்பசோனியா’ தனிநாட்டு விடுதலை போராட்டமாக மாற்றம் பழங்குடி கமரூன் மக்களை பிளவுபடுத்திய காலனிய மொழிகள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




கமரூன் சுமார் 23 கோடி மக்கள் தொகையினை கொண்ட இந்நாடு 1960களில் அப்போது காலனி ஆட்சி புரிந்து வந்த பிரான்ஸ் மற்றும் ஆங்கிலேயே அரசிடமிருந்து விடுதலை பெற்றது.

அதன் பிறகு இவ்விரு அரசுகள் தனித்தனியே ஆட்சி செய்த பிரதேசங்களில் அலுவல் மொழியாக இருந்த பிரெஞ்சு மற்றும் ஆங்கிலத்தை அப்படியே தங்களது அலுவல் மொழியாக இரு பிரதேசங்களும் ஏற்றுக்கொண்டன.

பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலம் கமரூன் மக்களுக்கு காலனியாதிக்க மொழியாகும். தற்போதைய காமெரூன் நிலப்பரப்பில் மக்கள் கற்காலத்தில் வாழ்ந்ததற்குரிய தடையங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய தொல்பழங்குடிகளான இவர்கள் பல்வேறு பழம்பெரும் மொழிகளை தங்கள் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றார்கள்.

55 ஆசிய ஆப்ரிக்கா மொழிகளுக்கும் 2 நிலோ சாஸறன் மொழிகளுக்கும், 173 நைஜீரியா காங்கோ மொழிகளுக்கும் தாயகம் இந்த கமரூன்.

மொழிசீர்திருத்தக் கோரிக்கைகள் தனி நாட்டிற்கான விடுதலை கோரிக்கையாக மாறியதற்கு அரசின் வன்முறைகளே காரணம். ஆயினும் பேசும் மொழிக்கான போராட்டம் நடக்கும் கமரூன் நாட்டின் முரன் என்னவெனில் ஆதிக்கம் செலுத்தும் அரசுக்கு உட்பட்ட பிரெஞ்சு பகுதி மக்களுக்கு பிரெஞ்சு மொழி அவர்களது தாய் மொழியில்லை, ஒடுக்கப்படும் பகுதியினருக்கும் ஆங்கிலம் அவர்களது தாய் மொழியில்லை என்பதுதான்.

கமரூனில் மொழி சார் சீர்திருத்தக் கோரிக்கையில் ஆரம்பித்த போராட்டம் தற்போது தனிநாடு கோரிக்கையில் வந்து நின்று கொண்டிருக்கிறது. வரலாற்றில் மொழி சார் பிரச்சனைகளை தொடர்ச்சியாக கண்டு கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் காலனிய மொழிகளால் ஒர் நாட்டின் மக்களையே பிளவுபடுத்திய நாடாக கமரூன் நாடு விளங்குகிறது.

**காலனிய மொழிகளின் ஆதிக்கம்**

ஆபிரிக்க தேசமான கமரூன் நாட்டு மக்கள் வடமேற்கு மற்றும் தென்மேற்கு என இரு மொழி பிரதேசங்களாகப் பிரிந்து இருக்கின்றனர். இவர்களில் சிறுபான்மையினர் ஆங்கிலம் பேசும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் மற்றைய நிலப்பரப்பில் வாழ்ப வர்கள் பிரெஞ்சு பேசும் மக்களாகவும் இருக்கின்றனர். வரலாற்றில் மொழிசார் பிரச்சனைகளை தொடர்ச்சியாக கண்டு கொண்டிருக்கும் தேசமாக கமரூன் நாடு விளங்குகிறது.

சுமார் 23 கோடி மக்கள் தொகையினை கொண்ட இந்நாடு 1960களில் அப்போது காலனி ஆட்சி புரிந்து வந்த பிரான்ஸ் மற்றும் ஆங்கிலேயே அரசிடமிருந்து விடுதலை பெற்றது.

கமரூனில் ஆங்கிலம் பேசும் நிலப்பரப்பு மக்கள் இவர்கள் தங்களை அம்பசோனியா என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் மொழி சார் பிரச்சினைகளை சுமார் 1960களின் தொடக்கத்திலிருந்தே அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தற்பொழுது இவர்கள் தங்கள் மொழியின் மீது பிரெஞ்சு மொழி பெரும்பான்மை அரசு ஆதிக்கத்தைச் செலுத்துவதை எதிர்த்து 5 ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தற்போது தீவிரமாகியிருக்கும் போராட்டம் 2016 ஆம் ஆண்டு துவங்கியது. அன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் கல்வி, வாழ்வாதாரம் என அனைத்தும் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு மொழி பெரும்பான்மை கமரூன் அரசு, அம்பசோனியர்களின் அலுவல் மொழியான ஆங்கிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு, நியாயப்படி கிடைக்கவேண்டிய வேலைவாய்ப்புகளும் கல்வியும் மறுக்கப்படும் நிலையை உருவாக்கி இருக்கிறது.

**தாய் மொழிக்கான போராட்டம்**

தாய் மொழிக்காக போராடி உயிரிழந்தவர்கள், அதனை நினைவுகூறி, அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பெப்ரவரி 21ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ 1999ஆம் ஆண்டு அறிவித்தது.

தாய் மொழி தினம் உருவாக்கத்திற்கு காரணமே, அன்றைய கிழக்கு பாகிஸ்தான் ஆன இன்றைய பங்களா தேஷ் ஆகும்.

தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் திகதி “வங்க மொழி இயக்கம்” உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல்




தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மொழிப் போராட்டம் தீவிரமாக பரவியது. கடந்த 1956ஆம் ஆண்டு, கிழக்கு பாகிஸ்தான் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது. இந்நினைவையொட்டி 2000ஆம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ஆம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

**மொழி சீர்திருத்தக் கோரிக்கை**

கமரூனில் மொழி சீர்திருத்தக் கோரிக்கையில் ஆரம்பித்த இப்போராட்டம் தனி நாடு கோரிக்கையில் வந்து நின்று கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கான நாட்டிற்கு அம்பசோனியா என்று பெயர் வைத்து தனியாக ஒரு கொடியினையும் வடிவமைத்துக் கொண்டுள்ளனர். மொழி என்பது வெறும் எழுத்தோ ஓசையோ அல்ல அது அந்த மக்களின் சுயமரியாதை.

மொழிசார் உரிமையினையும், பிற மொழிகள் தம் மொழியின் மீது செலுத்தத் துவங்கும் ஆதிக்கத்தினையும் அறிந்திராத மக்கள் பிற மொழி ஆதிக்கத்தினால் தம் மொழியின் வீழ்ச்சியையும் அதனைத் தொடர்ந்து வாழ்வாதாரத்தினையும் நிலத்தினையும் ஏன் மானத்தைக் கூட துறந்து வாழவேண்டியிருக்கும்.

பல நூறு மக்கள் உயிரிழந்து, பல லட்சம் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து அகதிகளாக வெளியேறிய நிலையிலும் மக்கள் உரிமைக்குரலுக்குச் செவி சாய்க்காத கமரூனிய அரசினை 39 ஆண்டுகளாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் பவுல் பியா பிரெஞ்ச் மொழி பிரதேசத்தைச் சேர்ந்தவர். பிரான்ஸ் நாட்டு அரசு பவுல் பியாவின் கமரூனிய அரசுக்கு ஏகோபித்த ஆதரவை தெரிவித்து வருகிறது.




போராடும் மக்களை வன்முறையால் ஒடுக்கும் ராணுவத்துக்கு ஆயுதங்களும் ராணுவப் பயிற்சியும் தொடர்ச்சியாக பிரான்ஸ் அரசாங்கத்திடம் இருந்து தான் கிடைத்துவருகிறது.

கமரூன் நாட்டின் அந்நிய முதலீடுகளில் பிரான்ஸ் முதலிடம் வகிக்கிறது. இரண்டாமிடத்தில் இருப் பது அமெரிக்கா. எண்ணெய், மரம், உள்கட்டுமானம், தொலைத்தொடர்புத் துறை, போக்குவரத்து, வங்கி, என அனைத்துத் துறைகளிலும் இவ்விரு நாடுகளின் முதலீடும் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2017 ஆண்டு செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் சபைக்கு அதிபர் பால் பியா வந்த போது அந்த அவையினை அம்பசோனிய மக்கள் முற்றுகையிட்டனர். இப்பிரச்சினை உலகளாவிய கவனத்தை ஈர்த்தது அதன் பின்னரே.

**அம்பசோனிய மக்கள் போராட்டம்**

அம்பசோனியா வழக்கறிஞர்களும் தங்களுடைய நீதிமன்றங்களுக்குப் பிரெஞ்சு மட்டுமே அறிந்த பிரெஞ்சில் வழக்காடும் வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்தத்தினை துவங்கித் தொடர்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் பகுதிகளில் வழக்காடும் ஆங்கில பொதுச்சட்டம் புரிவதில்லை என்பதே இவர்களின் வாதமாக இருக்கிறது. இதனை இவ்வாறே தொடரவிட்டால் நீதிமன்றங்கள் பிரெஞ்சு மொழி ஆதிக்கம் பெரும் இடங்களாக மாறுமென்று கூறி நீதிமன்றங்களைப் புறக்கணித்து முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

ஒரு பொதுவான அங்கீகாரமும் மதிப்பும் இரு மொழிப் பிரதேசங்களுக்கும் கிடைக்க வேண்டுமெனில் 1960-களில் ஆரம்பிக்கப்பட்டு பின் நிறுத்தப்பட்ட கூட்டாட்சி அரசியலமைப்பு சட்ட வரைவினை துவங்க வேண்டியதன் அவசியம் உள்ளதாகவும், அதுவே ஒரே தீர்வு என்று கூறுகின்றனர் வழக்கறிஞர்கள். தற்போது நடந்துவரும் இப்போராட்டங்கள் வழக்கறிஞர்களும் ஆசிரியர்களும் 2016ஆம் ஆண்டு நடத்திய ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்தே துவங்கியது.

**திருப்பி அடிக்கும் நிலை வரும்**

கமரூனிய பாதுகாப்புப் படைகள் பிரிவினைவாதிகள் என்று கூறி இளைஞர்களையும் பொதுமக்களையும் தாக்குவதையும் கொலை செய்வதையும் நிறுத்தாவிட்டால் விடுதலைக்காக வன்முறையை தங்கள் கையிலேந்தும் நிலைக்குத் தள்ளப்படுவோம் எனவும் இளைஞர்கள் இயற்கையின் தற்காப்பு விதிகளுக்கு உட்பட்டுத் திருப்பி அடிக்கும் நிலை வரும் எனவும் பிரிவினைக்கோரும் தலைமையிடமிருந்து அறிக்கை வெளியிடப்பட்டது.

அரசு அதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. அம்பசோனியர்களுக்கு மொழி பிரதிநிதித்துவம் தருவதற்கான எந்த நடவடிக்கையோ அதற்கான பிரயத்தனங்களோ எடுக்கப்படவில்லை.

மாறாக வன்முறையைக் கட்டவிழ்த்தது. போராட்டக்காரர்கள் எதிரிகளின் ஆயுதங்களையே எடுக்க வேண்டியதாகியது. இன்றைய நிலையில் அம்பசோனியர்களில் 30 ஆயுதங்கள் தாங்கிய குழுக்கள் உருவாகியிருக்கின்றனர். பிரிவினை கோரிக்கை பத்து வருடங்களாக ஆகியுள்ள நிலையில் விடுதலை கோரிக்கை செயல்பாட்டாளர்கள் பல பேர் காவல் படையினால் சுட்டுக் கொல்லப்பட்டும் தாக்குதலுக்கு உள்ளாகியும் இறந்து போயுள்ளனர்.

பொதுமக்கள் மீது அரசு கட்டவிழ்த்த வன்முறையை பொது இணைய தளங்களில் பதிவிட்டு ஆதரவு தேடி வந்த அம்பசோனியர்களின் இணையமும் தொலைத் தொடர்பும் பல ஆண்டுகளாகவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**பொது மக்களின் கோரிக்கைகள்**

ஒருபக்கம் அரசு எந்தவிதத்திலும் வளைந்து கொடுக்காமல் வன்முறையைக் கட்டவிழ்த்து அதன் போக்கில் சென்று கொண்டிருக்க உரிமைக்கான பிரச்சனைகளின் மத்தியில் ஒரு பெரும்பான்மை மக்கள் உணவின்றியும் இருக்க நிலையான இடமின்றியும் உயிருக்கு உத்திரவாதமின்றியும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பொது மக்களின் கோரிக்கைகளுக்கு இன்றளவும் தீர்வு ஏற்படாமல் இன்றளவும் போராட்டம் தொடர்கிறது. ஆனால் இதிலிருக்கும் முரன் என்னவெனில் ஆதிக்கம் செலுத்தும் அரசுக்கு உட்பட்ட பிரெஞ்சு பகுதி மக்களுக்கு பிரெஞ்சு மொழி அவர்களது தாய் மொழியில்லை, ஒடுக்கப்படும் பகுதியினருக்கும் ஆங்கிலம் அவர்களது தாய் மொழியில்லை என்பதுதான்.

# இராஜினாமாவை எழுத்துமூலம் அறிவித்தார் முஜிபுர் ரஹ்மான்!

கொழும்பு, ஜன. 22

கொழும்புத் தொகுதியை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி விலகல் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

முஜிபுர் ரகுமானின் கடிதத்தின் பிரகாரம் 2023ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி முதல் பதவி விலகல் அமுலுக்கு வரும் எனவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இதன்படி, முஜிபுர் ரகுமானின் ஆசனம் 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் பிரிவு 64(1) இன் படி வெற்றிடமாக இருப்பதாக தம்மிக்க தசநாயக்க தேர்தல் தலைவருக்கு தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் உரையாற்றியபோது, எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக பாராளு மன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவ தாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

# பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 22

பாடசாலை மாணவர்களுக் கான பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்த ஆண்டில் திட்டமிட்டவாறு பாடப் புத்தகங்களை விநியோகம் செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக விலை மனுக் கோரல் மூலம் தெரிவு செய்யப் பட்ட நிறுவனங்களுக்கான முற்பணம் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்பட்டதன் பின்னர் வழங்கப்படவேண்டிய கொடுப் பனவுகள் என்பன இதுவரை யில் வழங்கப்படவில்லை.

பாடப் புத்தகங்கள் அச்சிடு வதற்கான பொறுப்பு ஒப் படைக்கப்பட்ட நிறுவனங் களுக்கு முற்பணமாக 20 வீத கொடுப்பனவு வழங்குவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட் டுள்ளது.

அரசாங்கம் கொடுப்பனவு களை உரிய முறையில் வழங்கத் தவறியதனால் அச்சு நிறுவனங் கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது. (அ)

# திருமலை எண்ணெய் தாங்கிகள் குறித்தும் இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சு



கொழும்பு, ஜன. 22

திருகோணமலை மாவட்டத்தை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் இந்திய வெளிவிகார அமைச்சருடனான சந்திப் பின்போது கலந்துரையாடப்பட்டதாக வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய வெளிவிகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்திருந்த போது,இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல், பொருளாதார,சமூக விடயங்கள் மற்றும் முதலீடு தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட் டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தை எரிசக்தி மையமாக எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்பது தொடர்பில் இந்திய வெளிவிவ கார அமைச்சருடனான சந்திப்பின் போது கலந் துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அந்த திட்டத்திற்குள் திருகோணமலை எரி பொருள் தாங்கிகளும் அடங்குவதாக அவர் கூறினார்.

அது தொடர் பில் உடன்படிக் கைகள் இது வரை கைச்சாத்திடப்பட வில்லை எனவும் வெளி விவகார அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை, கலாநிதி எஸ்.ஜெய் சங்கர் பல இராஜாங்க அமைச்சர்களையும் சந்தித்து பல் வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியி ருந்தார்.

திருகோணமலையை எரிசக்தி ஏற்றுமதி மத் திய நிலையமாக மாற்றவேண்டும் எனவும் அது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் விசேட கவனம் செலுத்தியதாகவும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரி வித்தார். (அ)

# அமைச்சர் அலி சப்ரி சவூதிக்கு செல்கிறார்!

கொழும்பு, ஜன. 22

வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியா வுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள வுள்ளார் என வெளிவிகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை அவர் அங்கு தங்கியிருப்பார் என தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவ ரசர் பைசல் பின் பர்ஹான் அல் சௌதின் அழைப்பின் பேரில் சவூதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடவுள்ளதோடு இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, வளைகுடா ஒத் துழைப்பு பேரவை மற்றும் மக்கா மற்றும் மதீனா ஆளு நர்களையும் அமைச்சர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

கல்வி tv CHANNEL-1

**22.01.2023**

**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**22.01.2023**

**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## சர்வதேச பெண்கள் மாநாட்டில் ஷிரந்தி ராஜபக்ஷவும் பங்கேற்பு

கொழும்பு, ஜன. 22

ஈரானின் தெஹ்ரானில் நடைபெற்ற செல்வாக்கு மிக்க பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் இலங்கையின் முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ பங்கேற்றுள்ளார்.

ஈரான் அரசின் அழைப்பின் பேரிலேயே இவர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் புர்கினா பாசோ, கிர்கிஸ்தான், செர்பியா, கினியா, நைஜர், நைஜீரியா, இலங்கை, சிரியா, துர்க்மெனிஸ்தான் மற்றும் ஆர்மேனியா ஆகிய நாடுகளின் அரச தலைவர்கள், அமைச்சர்கள், துணை ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட மூன்று பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 22

ராஜகிரிய பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், ஒரு கிலோ 254 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேகநபர்களிடம் இருந்து ஒரு இலட்சத்து 47 ஆயிரம் பணம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறிப்பிட்டனர். (அ)

# கோட்டாவின் செயற்பாடுகளே நாட்டின் அழிவுக்குக் காரணம்!

### பைசர் முஸ்தபா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 22

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் செயற்பாடுகள் காரணமாகவே நாட்டுக்கு தற்போதைய அழிவு ஏற்பட்டதாக முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபாய ராஜபக்ஷவின் செயற்பாடுகளேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. இப்படியான மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தியதன் காரணமாவே வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவருக்கு தனது பதவியை கைவிட நேரிட்டது.

கோட்டாபாய ராஜபக்ஷ செய்த பொருளாதார அழிவு காரணமாக எமக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல நேரிட்டது. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு முன்னதாகவே அவரிடம் கூறினார்கள்.

தலைக்கனம் காரணமாக அவர் செல்லவில்லை. தற்போதாவது சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக ஏதாவது ஒரு நிவாரணத்தை பெற வேண்டும்.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடமும் தவறுகள் இருக்கின்றன. அவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவி வகித்த பின்னர் ஓய்வுபெற்றிருந்தால், மக்கள் தற்போதும் அவரை தெய்வத்தை போல் போற்றுவார்கள்.

காரணம் அவர் போரை முடிவுக்கு கொண்டு வந்த யுக நாயகன். இது எந்த விவாதங்களும் இன்றி நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயம்.

அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்தமைக்கான முழுப் பொறுப்பையும் மகிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும். அரசியலில் ஈடுபடாதவர் என்ற வகையில் தனது சகோதரரின் திறமை மற்றும் திறமையின்மையை அறியாமல் இருந்தது சிக்கலுக்குரியது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட முழு அழிவுக்கான பொறுப்பையும் மகிந்த ராஜபக்ஷவே ஏற்கவேண்டும்.

கோட்டாபய ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர், தனது சகோதரர்கள் கூறுவதை கேட்கவில்லை. எனக்கே எல்லாம் தெரியும் என்று அவர் செய்ததை அறிந்தவர்கள் அறிவார்கள்.

இதனால், நாம் எப்போதும் ஒரு நபரை சுற்றி ஒன்றிணையாது, கொள்கை ஒன்றுக்கு அமைய ஒன்றிணைய வேண்டும். தேர்தலில் வெற்றி பெற செய்ய வேண்டியது நபரை அல்ல, கொள்கையையே வெற்றி பெற செய்யவேண்டும்.

அதேவேளை கோட்டாபய யுத்தத்தில் வெற்றி கிடைக்கவில்லை. அவர் ஆட்சியில் இருக்கும் போது அவரது செயற்பாடுகளை பார்த்தால், போர் சம்பந்தமாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மிகப் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

அவர் இல்லை என்றால், யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது தனது நம்பிக்கை - என்றார். (அ)

## கொழும்புக்கான மேயர் வேட்பாளரை அறிவிக்காத ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜன. 22

கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுக்கள் நேற்று கையளிக்கப்பட்டதுடன் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அணியில மேயர் பதவிக்கான வேட்பாளரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என தெரியவருகிறது.

இதனடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு தகுதியான நபரை கட்சி தீர்மானிக்கும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

தேர்தலில் வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் வாக்குகளின் எண்ணிக்கை உட்பட முழு தேர்தல் செயற்பாடுகளிலும் வேட்பாளர்களின் செயல் திறனுக்கு அமைய மிகவும் பொருத்தமான நபர மேயர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவார் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலேயே பலத்த போட்டி இருக்கும் கூறப்படுகிறது.

கொழும்பு மாநகர சபையானது ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை என வர்ணிக்கப்படும் மாநகர சபையாகும். அத்துடன் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அதிகளவில் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களே இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 7 உள்ளூராட்சி மன்றங்களில் சமத்துவக் கட்சி வேட்புமனு



கிளிநொச்சி, ஜன. 22

சமத்துவக் கட்சி நேற்று கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 7 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி கிளிநொச்சியில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளுக்கும், யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை நகர சபைக்கும் வவுனியாவில் வெங்கல செட்டிக்குளம் மற்றும் வவுனியா தெற்கு ; (தமிழ்) பிரதேச சபைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் துனுக்காய் பிரதேச சபைக்கும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. (அ)

## 3 சபைகளில் போட்டியிடும் மார்க்சிச லெனினிச கட்சி

யாழ்ப்பாணம், ஜன. 22

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வலி.கிழக்கு, வலி.தெற்கு, வலி.மேற்கு ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளது.

மக்கள் நலன் சார்ந்த, ஒற்றுமையாக செயற்படும் தமிழ்த் தரப்புக்களுடன் தேர்தலின் பின்னர் இணைந்து செயற்படவுள்ளதாக கட்சியின் தலைவர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார். (அ)




## மரண அறிவித்தல்



### திருமதி
### சின்னத்துரை இராஜராயேஸ்வரி

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராஜராயேஸ்வரி கடந்த 18-01-2023 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சின்னத்துரையின் அன்பு மனைவியும்,தனபாலசிங்கம், சரோஜினிதேவி, புஸ்பநாயகி மற்றும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, றேணுகாதேவி, கிருஸ்ணானந்ததேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சதாநிகன், சற்குணதாசன்(குணம்), சசீகலா, சாந்தன், சகிந்தன், காலஞ்சென்றவர்களான சர்வகுமார்(கண்ணன்), சபேசன்(ஆனந்தன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,சிவகௌரி, நகுலேஸ்வரி, வாமணராஜசேகரன், தர்மரஞ்சினி, கிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், சின்னம்மா (பராசக்தி), செல்லம்மா, காலஞ்சென்ற பொன்னம்மா, முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனியும்தினுசன், அனன்யா, அஸ்நியா, சிவகீர்த்தன், சாணுயா, அஸ்வின், அவிநேஸ், அகிரா, ஆகுசன், ஆகிசன், அகரன், அந்துவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 26.01.2023 வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

## யாழ்.மாநகர...

தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இந்த நிலையில் அவரது வெற்றிடத்துக்கு 2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66 (எ) பிரிவின் கீழ், கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட தெரிவின் மூலம், முன்மொழியப்பட்டபடி இ. ஆர்னோல்ட் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்ததால் வெற்றிடமாக இருந்த முதல்வர் பதவிக்கு உறுப்பினர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது 24 உறுப்பினர்கள் கூட்டமண்டபத்தில் கூடியிருந்தனர். கூட்டத்துக்குத் தேவையான நிறைவெண் இருப்பதனால் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதாக உள்ளூராட்சி ஆணையாளர் செ. பிரணவநாதன் அறிவித்ததோடு, முதல்வருக்கான முன்மொழிவுகளைக் கோரினார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட்டின் பெயர் முன்மொழியப்பட்டது. இதனையடுத்து முன்மொழிவை ஆட்சேபிப்பதாகத் தெரிவித்து ஈ.பி.டி.பியை சேர்ந்த எம்.ரெமீடியஸ் சபையிலிருந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினர்.

இதனால் தெரிவைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான கோரம் இல்லாத காரணத்தினால் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும், தெரிவுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு நியாயமற்றது எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட 20 உறுப்பினர்கள் தமது எழுத்து மூல ஆட்சேபனையை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இது தொடர்பில் ஆளுநர் தலைமையில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் முன்னாள் உள்ளூராட்சி ஆணையாளர்களில் ஒருவரும் கூடி ஆராய்ந்ததாகவும், அதன் பின் யாழ். மாநகர சபையின் முதல்வராக, முன்னாள் முதல்வர் இ. ஆர்னோல்ட் பிரகடனப் படுத்தப்பட உத்தரவிட்டுள்ளதாகவும் ஆளுநர் செயலக வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

இதற்கமைய தற்போது யாழ். மாநகர சபையின் முதல்வராக, முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் பிரகடனப்படுத்தப்பட்டார். (அ)

## மகிந்த,...

அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜி-7 நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை வலியுறுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்துக்கு இது தான் பிரச்னை என்று தெரியும்.எனவே சமாதானத்தை அடைய, உண்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள் என்றும் கனேடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜொலி தெரிவித்துள்ளார். (அ)

## கரைதுறைப்பற்...

பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத முகவர் ஒருவர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளமையால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவத்தாட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை,

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்காக ஈ.பி.டி.பியினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மோடியை...

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னர் புதுடில்லிக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இந்தியத் தூதுவருடன் பேசி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டான் தொலைக்காட்சியில் இன்று இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகும் 'ஸ்பொட் லைட்' நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் இனப்பிரச்னை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் எதுவும் நடக்கப்போவதில்லை. தனியே இங்கு வரும் இந்தியத் தலைவர்களைச் சந்திப்பதால் மட்டும் ஒன்றும் நடக்கப் போவதில்லை.

புதுடில்லிக்கு செல்லவேண்டும். அங்கு சென்று இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்து பேசவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு பின்னர் இந்தியாவுக்கு சென்று பிரதமர் மோடியை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். அதற்காக இந்தியத் தூதுவரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளோம்.

அத்துடன் தமிழ்நாட்டுக்கும் சென்று அங்கு முதலமைச்சர் ஸ்டாலின் உட்பட பலரையும் சந்திக்கவுள்ளோம்.

இந்திய அரசின் பங்களிப்பு இல்லாமல் எங்களுக்கு எந்த தீர்வும் வந்துவிடப் போவதில்லை-என்றார். (அ)

(மேலும் விவரங்களுக்கு இன்று இரவு 7 மணிக்கு டான் தொலைக்காட்சியின் 'ஸ்பொட்லைட்' நிகழ்ச்சியை பாருங்கள்)

## யாழில் முக்கிய...

சமர்ப்பிக்கப்பட்டபோது 150 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 7 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு வேலணை பிரதேச சபையில் முழுமையாகவும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் பகுதியளவிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனு வேலணை பிரதேச சபையில் முழுமையாகளும்,வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பகுதியளவிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனு ஊர்காவற்துறை பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நவ லங்கா நிதஹஸ் பக்ஷயவின் வேட்புமனு வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளது-என்றார்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வேட்புமனு தாக்கல் செய்த சுயேச்சை குழுக்களின் எந்த வேட்புமனுவும் நிராகரிக்கப்படவில்லை. (அ)

## வேட்புமனு...

கரிக்கப்பட்டுள்ளன.அங்கு 6 வட்டாரங்களுக்கான வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனர்ள.

திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி பிரதேச சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த வேட்புமனுவின் மேல் பகுதியில் கட்சியின் பெயரை எழுதியிருக்கவில்லை.

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபைக்கான வேட்பாளர் ஒருவர் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபைக்கான வேட்பாளர் நியமனப் பொறுப்பை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜனநாயகப் போராளிகள் ஏற்றிருந்தனர். எனினும்,வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதி நாளான நேற்று பகல் 12 மணிக்குள் வேட்புமனு தாக்கல் செய்யப்படவில்லை. (அ)

# ஜனாதிபதி ரணிலின் தொலைபேசியை ஆராயுமாறு கோருகின்றார் அனுரகுமார

கொழும்பு, ஜன. 22

அரசியலமைப்பிற்கு முரணாக சட்டங்களை நடைமுறைப்படுத்துவோருக்கு எதிராக தமது ஆட்சியின் கீழ் தண்டனை வழங்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

கொழும்பு மாளிகாவத்தையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்களை கண்டறியுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முடியுமானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசியை ஆராயுமாறு பொலிஸாரிடம் கேட்டுக்கொள்வதாகவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தலுக்கு நிதி வழங்குவதாக வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும்,தற்போது நிதியை பெற்றுக்கொடுக்க முடியாதென திறைசேரியினால் தெரிவிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

தேர்தலுக்கு நிதி வழங்காமல் இருப்பது குற்றமெனவும் அதற்கு 3 வருட சிறைத்தண்டனை வழங்கப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தெரிவத்தாட்சி அதிகாரிகளை கட்டுப்பணம் ஏற்க வேண்டாமென தெரிவித்த செயலாளருக்கு எதிராகவும், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் போது உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் மேலும் கூறினார். (அ)

# கோப்பாயில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக்கொலை!

யாழ்ப்பாணம், ஜன. 22

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கோப்பாய் மத்தி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றிரவு அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அதே பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ர.அஜித் (வயது 30) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் விநியோகிக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 22

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை, பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி நாடுமுழுவதிலும் ஆரம்பமாகவுள்ளது.

பரீட்சை நடத்துவதற்கு தேவையான பணியாளர் தயார் படுத்தப்பட்டுள்ளதுடன், முதல் 6 நாட்களுக்கு தேவையான வினாத்தாள்கள் முதலில் விநியோகிக்கப்படவுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# சு.க.அமோக வெற்றி பெறும்!

கொழும்பு, ஜன. 22

எந்த சவாலையும் எந்த சக்தியையும் பலமாக எதிர்கொண்டு முழு நாடும் வெற்றி பெறும் எனவும் வடக்கு, கிழக்கு உட்பட 326 உள்ளூராட்சி சபைகளுக்கு கை சின்னத்தில் போட்டியிட்டு நாட்டு மக்களை வெற்றி பெற செய்ய போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பொலன்நறுவை மாவட்டத்திற்கான வேட்புமனுக்களை நேற்று தாக்கல் செய்யும் நிகழ்வில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கை சின்னத்தில் போட்டியிடுகிறது. பொலனறுவை மாவட்டத்தில் 8 உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன.

அனைத்து சபைகளுக்காகவும் நாங்கள் போட்டியிடுகிறோம். பொலன்நறுவையில் அமோக வெற்றியை பெறுவோம்.

கடந்த காலங்களில் நான் பொலனறுவையின் விவசாயிகளுக்காக குரல் கொடுத்தேன்.

வீதியில் பேரணி சென்றேன். வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினேன். கூட்டங்களை நடத்தினேன். பாராளுமன்றத்தில் ஆற்றிய அனைத்து உரைகளிலும் தீர்க்கப்படாத விவசாயிகளின் பிரச்னைகள் சுட்டிக்காட்டினேன்.

நாட்டுக்கு என்ன நடந்துள்ளது என்பதை தற்போது முழு நாடும் அறியும். நாங்கள் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 326 உள்ளூராட்சி சபைகளுக்காக போட்டியிடுகிறோம்.

உள்ளூராட்சி சபைகளில் தூய்மையான நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காக நாங்கள் வெற்றி பெறுவோம். கட்சி என்ற வகையில் நாங்கள் சட்டத்திட்டங்களை உருவாக்குவோம்.

அந்த சட்டத்திட்டங்களுக்கு அமைய வேலை செய்ய வேண்டும். அடுத்த தேர்தலையும் குறி வைத்தே நாங்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றோம். தேர்தல் ஒத்திவைக்கப்படுவது குறித்து எமக்கு எதனையும் கூற முடியாது.

நாங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளோம். தற்போதே நாங்கள் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்கின்றோம்.

பொலனறுவையிலும் இலங்கை சகல மாவட்டங்களிலும் எங்களால் வெற்றி பெற முடியும்.

பட்டினியில் இருக்கும் மக்கள், மருந்துகள் இன்றி வைத்தியசாலையில் இறக்கின்றனர்.

இந்த தேர்தலிலேயே நாட்டில் நிலவும் ஏனைய பொருளாதார, அரசியல், கலாசார நெருக்கடிகள் என அனைத்தையும் மாற்றி நாட்டை சிறப்பான இடத்திற்கு கொண்டு வரும் அடித்தளம் இடப்படும்.

இதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமக்கு அமோக வெற்றி கிடைக்கும் என எதிர்பாரக்கின்றோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ்.மாநகர மேயர் தெரிவின் பின்னால் பல இலட்சம் ரூபாய் கைமாற்றப்பட்டதா?

## இலஞ்ச ஆணைக்குழுவை நாடுகிறார் முன்னாள் முதல்வர் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஜன. 22

சட்டப்புத்தகங்களை தூக்கி எறிந்து விட்டு யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவு இடம்பெற்றுள்ளது. இதன் பின்னணியில் இலஞ்சம் இருக்கிறதா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளோம். அத்துடன், நீதிமன்றத்தையும் நாடவுள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் யாழ்.மாநகர சபை முதல்வருமான வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை முதல்வராக இ.ஆனோல்ட் நேற்று பதவியேற்றுள்ள நிலையில், அவரது தெரிவில் சந்தேகம் எழுப்பியுள்ளார் வி.மணிவண்ணன்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சட்டப்புத்தகங்களை தூக்கி எறிந்துவிட்டு முதல்வர் நியமனம் நடைபெற்றுள்ளது. இப்படியான நியமனங்கள் நடப்பதென்றால் எதற்கு சட்டம்?. உள்ளூராட்சி தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தமது நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த பொம்மையாக ஒருவரை நியமித்து இந்த நியமனம் நடந்துள்ளது. யாழ்.மாநகரசபை முதல்வர் பதவியிலிருந்து நான் விலகியதும் சபை கலைந்திருக்க வேண்டும். சபையை கலைக்காமல் மீண்டும் முதல்வர் தெரிவு நடந்தது முதலாவது விதி மீறல்.

முதல்வர் தெரிவில் ஆர்னோல்ட்டை பிரேரிக்கமுடியாது. அவரை பிரேரித்தது இரண்டாவது விதி மீறல்.

கோரம் போதாது என சபையை ஒத்திவைத்த பின்னர், முதல்வர் தெரிவு நடந்ததாக கூறி, வர்த்தமானியிட்டது மூன்றாவது தவறு.

இந்த நியமனத்தின் பின்னால் பல இலட்சம் ரூபா கைமாற்றப்பட்டதாக சந்தேகிக்கிறோம். அதனால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளோம்.

வேட்புமனு தாக்கல் வேலைகளில் தீவிரமாக இருந்ததால், இந்த நியமனத்திற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கையெடுக்க முடியவில்லை. சட்ட நடவடிக்கையெடுப்பதற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளோம்-என்றார். (அ)



# இரவு 7 மணிக்கு பின் மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன. 22

நாளை திங்கட்கிழமை முதல் இரவு 7 மணிக்குப் பின்னர் மின்வெட்டை அமுல்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை ஆரம்பமாக இருக்கும் கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் பரீட்சைகள் திணைக்களம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# மொட்டிலிருந்து அணி அணியாக வெளியேறவுள்ளனர் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜன. 22

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 20 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விரக்தியடைந்துள்ள மற்றுமொரு எம்.பிக்கள் குழுவினர் வெளிநாடு செல்வதற்கான விஸா உள்ளிட்ட ஆவணங்களை தயாரித்து வருவதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி வேறு கட்சிகளிலும் புதிய முன்னணிகளிலும் இணைந்துள்ளனர். (அ)

# அரசமைப்பு சபைக்கு மூவர் ஜனாதிபதியினால் நியமனம்

கொழும்பு, ஜன. 22

அரசியலமைப்பு சபைக்கு மூன்று வருட காலத்துக்கு மூன்று பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கலாநிதி பிரதாப் ராமானுஜம், கலாநிதி திருமதி தில்குஷி அனுலா விஜேசுந்தர மற்றும் கலாநிதி திருமதி வெலிகம விதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோர் அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களாக கடமையாற்றவுள்ளனர். (அ)

# முட்டை தட்டுப்பாட்டுக்கு ஜூன் மாதத்துக்குள் தீர்வு

கொழும்பு, ஜன. 22

முட்டை தட்டுப்பாடு ஜூன் மாதத்திற்குள் முடிவுக்கு வரும் என்று வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் பிரியங்கா அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நாளாந்தம் 3 மில்லியன் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, முட்டை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் 32 ரூபாய் 5 சதத்துக்கு இறக்குமதி செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா விபத்தில் காயமுற்ற 53 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சை

கொழும்பு, ஜன. 22

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் ரதெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த 53 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாணவர் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக நுவரெலியா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் மஹேந்திர செனவிரத்ன தெரிவித்தார்.

05 மாணவர்களுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் இருந்து கல்வி சுற்றுலாவுக்கு சென்ற பஸ், நேற்று முன் தினம் இரவு வான் மற்றும் ஓட்டோவுடன் மோதி விபத்திற்குள்ளானது. விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 13 வயதுச் சிறுவனும், 8 மற்றும் 12 வயதான சிறுமிகளும் உயிரிழந்தவர்களில் அடங்குகின்றனர்.

உயிரிழந்த ஏனையோர் 26, 27, 43 வயதானவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் ஹற்றன் மற்றும் நானுஓயாவை சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, பஸ் விபத்தையடுத்து நானுஓயா - ரதெல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கு:

# இரு இலங்கை பிரதிநிதிகளை உடன் கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, ஜன. 22

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் இருவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிலிந்த ஹெட்டியாராய்ச்சி மற்றும் இந்திரஜித் ஹெட்டியாராய்ச்சி ஆகிய இருவருக்கு எதிராகவே இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பை மாசுபடுத்தியமை உள்ளிட்ட 08 குற்றச்சாட்டுகளின் கீழ், கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்தின் உள்ளூர் முகவர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிவாதிகள் 08 பேருக்கு எதிராக கடல்சார் சூழல் தடுப்பு சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இந்த நிலையில், இவர்கள் இருவரையும் உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதம மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கை கடற்பரப்புக்கு வெளியே இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன்களுடன் சரக்குகளை ஏற்றிச்சென்ற போது தீப்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

பக்க வடிவமைப்பாளர் தேவை!



பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை

Adobe InDesign, Adobe Photoshop தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை
eelanaduweekly@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது
ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.